விலை: 50.00
பக்கங்கள் : 16
website ; www.valampurii.lk
viber ; 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 322 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 20 திங்கட்கிழமை (06.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### ஜனவரி 21இல்

## தமிழரசுக் கட்சிக்கு புதிய நிர்வாகம் தெரிவு

(வவுனியா)

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்ற முற்பகல் வவுனியாவில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் இடம்பெற்றது.

இம்மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொள்ளவில்லை.

15

## இனவாதத்தை தூண்டுவோரை சிறையில் அடைக்க வேண்டும்

### மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



(கொழும்பு)

"தமிழ் - முஸ்லிம் - சிங்கள மக்கள் இடையே இனவாதத்தைக் கக்கி வன்முறையைத் தூண்ட முயற்சிப்பவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். இந்த விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயக்கம் காட்டக் கூடாது.

15

### ஜனாதிபதித் தேர்தலில்

# தமிழர் சார்பாக பொது வேட்பாளர்

### ஐ.த.தே.கூட்டணி தீர்மானம்

(மன்னார்)

**ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது எனவும் அதற்கு ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவைக் கோருவது எனவும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி (டி.ரி.என்.ஏ) தீர்மானித்துள்ளது.**

ஐந்து தமிழ்க் கட்சிகளை உள்ளடக்கிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நேற்று மன்னாரில் நடைபெற்றபோதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பொது வேட்பாளர் விடயத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி,

15

## கொழும்பில் யாழைச் சேர்ந்த இளைஞன் சடலமாக மீட்பு



(கொழும்பு)

வெள்ளவத்தை கடற்கரையில் யாழ்ப்பாண இளைஞர் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

நேற்றுக் காலை குறித்த இளைஞனின் சடலத்தை பார்த்தவர் கள் வழங்கிய தகவல் தெரிவித்ததை

02

## வரி விலக்கு கோரிய மனு நிராகரிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் விதித்துள்ள புதிய வரிக் கொள்கைகளுக்கு அமைவாக தமது சம்பளத்தில் இருந்து வரி அறவிடப்படுவதைத் தடுக்குமாறு உத்தர விடக்கோரி நீதித்துறை அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட 3 தரப்பினர் தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

அந்த மனுதாரர்களில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளரும் உள்ளடங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(7)

### பண்ணையாளர்களுக்கு ஆதரவாக

## போராட்டத்தில் ஈடுபட்ட பல்கலை மாணவர்கள் கைது

(மட்டக்களப்பு)



மட்டக்களப்பு சித்தாண்டியில் மேய்ச்சல் தரைப் பண்ணையாளர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட ஆறு பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸா

15

### தேர்தல்களில் ஆதாயம் பெறவா

## சீனி வரி மோசடிக்கு அரசு துணை நிற்கிறது

### சஜித் பிரேமதாஸ கேள்வி

(கொழும்பு)

சீனி மீதான வரியை மாற்றியமைத்ததில் பெரும் மோசடி நடந்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ மேற் கண்டவாறு கூறினார்.

15

### கெற்பேலியில்

## யுவதியொருவர் சடலமாக மீட்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலி மேற்குப் பகுதியில் நேற்றுக் காலை 24 வயது யுவதி ஒருவர் தூக்கிட்ட நிலையில் அவருடைய வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் ஆட்கள்

15

### ஜனாதிபதி ரணிலிடம்

## முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தது பெரமுன

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உடன் அமுல்படுத்துமாறு நான்கு விசேட கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

இதன்படி, சமுர்த்தி கொடுப்பனவை தொடர்ந்தும் வழங்குதல், உரமானியத்தை தொடர்ந்தும் வழங்குதல், பாராளுமன்ற உறுப்பினர்களின் பரவலாக்கப்பட்ட மறு ஒதுக்கீடு, அரச நிறுவனங்

15

### நிர்மலா சீதாராமனை

## தமிழ்க் கட்சிகள் சந்திக்காமை தொடர்பில் சுமந்திரன் விளக்கம்



(கொழும்பு)

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் இலங்கை விஜயம் குறித்த தகவல்கள் "நாம் 200" நிகழ்வின் ஏற்பாட்டாளர்களால் இரகசியமாக பேணப்பட்டமையினால், நாம் அவருடனான சந்திப்புக்கு அனுமதி கோருவதற்கு தமக்கு போதுமான

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசா விண்ணப்பம்

**சுவிஸ் கனடா பிரான்ஸ் லண்டன் இத்தாலி சுவிடன்**

ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா,பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும்.ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**அனைத்து நாடுகளுக்குமான Online பதிவுகள் பெற்றுத் தரப்படும் Visa விண்ணப்பங்களும் Online மூலம் பூர்த்தி செய்யப்படும்.**

ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

வேலைவாய்ப்பு விசாக்கள் பெற்றுத்தரப்படும்.

**உங்களிடம் கனடா நாட்டிற்கான பொன்சர் இல்லையா? கவலையை விடுங்கள் அதை எம்மிடமே பெற்றுக்கொள்ளலாம்.**

தொலைபேசியில் தகவல்கள் வழங்கப்படமாட்டாது.

**NSA Group of Company (Pvt) Ltd.**
**197, Main Street, Jaffna.**

(17685)

**077 266 6429, 021 221 0599, 077 877 4838**

குறிப்பிட்ட பொன்சர் மாத்திரமே கையிருப்பில் உள்ளன.



## தரமான காணி விற்பனைக்கு உண்டு

GOLDEN Real Estate

**யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 60 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு, நன்னீரூற்று
- வடமாகாண சபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- 18 அடி பாதை
- யாழ். பஸ் நிலையத்திலிருந்து 6 km தூரம் மிகவும் நல்லசூழல்.
- குடியிருப்புகள் சூழவுள்ள காணிவீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- பரம்பரைக்காணி, பல வருடகால தேசம்பு, தூய உறுதி
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் காலை 06.00 - மாலை 06.00 மணிவரை
- 1 பரப்பின் விலை 24 லட்சம்

**Golden Real Estate (PVT) Ltd**
**Director & Owner : T.Kalaithasan**

(17683)

**077 468 3354, 077 288 0152, 077 623 4204**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும் 3 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 Km, திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 Km, நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 Km, திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 Km
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பார்வையிடும் நேரம் :**
**காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை**

**தொடர்புகளுக்கு : ஜெயம்**

(17684)

**077 814 7389, 077 986 5457**


## தமிழ்...

கால அவகாசம் இருக்கவில்லை என இலங்கைத் தமிழரசு கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஆனால் இந்திய அரசாங்கத்தின் சார்பில் தலைவர்கள் எவரேனும் இலங்கைக்கு வருகைதந்தால், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துவிட்டுச் செல்லும் வழக்கத்துக்கு மாறாக, இம்முறை நிர்மலா சீதாராமனுக்கும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெறவில்லை. எனவே இச்சந்திப்பு இடம்பெறாமைக்கான காரணம் என்னவென்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவரது வருகை முற்கூட்டியே தெரிந்திருந்தால் சந்திப்பதற்கு கால அவகாசம் கோரியிருப்போம். எனவே இதனை எம்மிடம் கூறுவது பற்றி இந்நிகழ்வை ஏற்பாடு செய்தவர்கள் தான் சிந்தித்திருக்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், எமக்கு ஆதரவாக செயற்படாவிடின் நாம் சீனாவுடன் சேர்ந்துவிடுவோம் எனக்கூறி இந்தியாவை அச்சுறுத்தும் வகையில் தாம் ஒருபோதும் செயற்படப்போவதில்லை மானசீகமான முறையில் தாம் இந்தியாவின் நண்பராகச் செயற்படுவதாகக் குறிப்பிட்டார்.

அதேவேளை சீனாவை சார்ந்து செயற்படுவதோ அல்லது நீங்கள் எமக்கு ஆதரவாக செயற்படாவிடின், நாம் உங்களுடைய எதிரியுடன் சேர்ந்துவிடுவோம் என்று இந்தியாவை அச்சுறுத்தும் வகையில் செயற்படுவதோ தமக்குப் பொருத்தமானதல்ல எனவும், தாம் ஒருபோதும் அவ்வாறு நடந்துகொள்ளப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் நாம் இந்தியாவின் மானசீக நண்பராக செயற்பட்டுவருகின்றோம் என்று சுட்டிக்காட்டிய சுமந்திரன், நாம் அவர்களது உண்மையான நண்பர்கள் என்பது இந்தியாவுக்கும் தெரியும் என்று குறிப்பிட்டார். (7)

## கொழும்பில்...

யடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில், இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மானிப்பாய் வீதி, தாவடியைச் சேர்ந்த 28 வயதான சர்வானந்தா கிருசாந் என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த இளைஞனின் முகத்திலும் உடலிலும் அடிகாயங்கள் காணப்படுகின்றன.

நீதவான் விசாரணைகளின் பின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் கணக்கியல் பாட ஆசிரியர்




**திருமதி சுதாஜினி சஞ்சீவ்**
**B.Com, MEd, M.A**
**S.L.P.S III**

அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் III இல் பதவியுயர்வு பெற்றுள்ளதையிட்டு அவரை மனதாரப் பாராட்டுவதுடன் அவரின் பணி மென்மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

**நலன்புரிக் கழகம்**
**யா/கோண்டாவில்**
**இந்துக் கல்லூரி**

(17673)



## 8ம் ஆண்டு நிறைவில் உம் நினைவுகள் சுமந்து



**திருமதி நிகிலா சுதர்சன்**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17.04.1971 | 05.11.2015 |

திதி: அபரபக்க நவமி 06.11.2023

கனம் வழங்க முனையப் பெற்றதும்
வமைதின் பல்வகைமையை ஒத்ததாய்
இயல்பும் பலதாய் ஒருங்கமைந்தாள்
அத்தகைமையில் அன்னைதான் சொருபமே
சிந்தனையில் நிகழ்வுகளாக திகழும்
எக்கணமும் மெய்யானதாக மறையாது
தரிக்கத்தான் எண்ணமும் தேடுதே....

(17682)

இல.27/14,
1 ஆம் ஒழுங்கை,
ஈச்சமோட்டை.

நீங்கா நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முழுவதும் தொடர் போராட்டங்கள் நடத்தத் தயாராகும் அமைப்புகள்

## புலனாய்வுப் பிரிவு தகவல்

**(கொழும்பு) நாடு முழுவதும் தொடர் போராட்டங்களை நடத்த சில கட்சிகள் மற்றும் அமைப்புகள் தயாராகி வருவதாக புலனாய்வு அமைப்புகள் தெரிவித்துள்ளன.**

இம்மாத நடுப்பகுதியில் இருந்து இந்த போராட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

மின் கட்டண உயர்வு, எரிபொருள் மற்றும் எரிவாயு விலை உயர்வு, அடுத்த ஆண்டு முதல் வற் வரி உயர்வு, அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு, சுகாதார சேவை குறைபாடுகள், ஆசிரியர் சேவைகளில் சிக்கல்கள், அரசு நிறுவனங்களைமறுசீரமைத்தல்போன்ற பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி இந்த தொடர் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக முழுமையான அறிக்கை அரசுக்கு அளிக்கப்படும் என புலனாய்வு அமைப்புகளின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

## நடைமுறைக்கு வரவுள்ள மற்றுமொரு வரி

(கொழும்பு) இலங்கையில் காணிக்கு வரி விதிக்க அரசாங்கம் யோசனைகளை முன்னெடுத்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்காகவே இந்த வரி விதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# அடுத்த ஆண்டிற்குள் அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

## கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு



(கொழும்பு) எதிர்வரும் 2024ஆம் ஆண்டிற்குள் இலங்கை பாடசாலைகளில் உள்ள அனைத்து அதிபர் வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இலங்கை அதிபர் சேவையின் தரம் ii இற்கு 4672 புதிய அதிபர்களை ஆட்சேர்ப்பு செய்யும் நிகழ்வில் அமைச்சர் இந்தக் கருத்துக்களை கொழும்பு டி. எஸ் சேனநாயக்க வித்தியாலயத்தில் நடைபெற்ற நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கல்வித்துறையில் நிலவும் வெற்றிடங்களை தொடர்ச்சியாகவும் முறையாகவும் பேணுவதற்கு அவற்றை நிரப்புவது இன்றியமையாதது என சுட்டிக்காட்டிய அமைச்சர், தற்போது கல்வி நிர்வாக சேவையில் 808 வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் 50% பூர்த்தி செய்வதற்கு திறைசேரி அனுமதியளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் புதிதாக நியமனம் பெற்ற இந்த அதிபர்கள் எதிர்நோக்கும் சவால்கள், சில வருடங்களுக்கு முன்னர் அதிபர்கள் எதிர்கொண்ட அனுபவங்கள் மற்றும் சவால்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. விரைவில் இந்த அதிபர்கள் டிஜிட்டல் மூலம் எதிர்காலத்தை எதிர்கொள்ளும் குழந்தைகளின் தேவைகளை சரியாகக் கண்டறிந்து அவர்களுக்கான பள்ளியைத்தயார்படுத்த வேண்டும். தொழில்நுட்பம், பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியில் அது குறித்து விசேட கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் பாடசாலை அமைப்பிற்கு இவ்வாறான அதிபர்கள் இணைத்துக் கொள்ளப்படுவது இதுவே முதல் தடவை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பாடத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் இவ்வருடம் அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட போது பாடப்புத்தக விநியோகம், சீருடை விநியோகம் என பல விடயங்களில் சவால்கள் காணப்பட்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்பட்டு வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.50% கட்டணத்தை அதிகரிக்க பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கல்வி அமைச்சு அவ்வாறான தீர்மானத்தை எதனையும் வழங்கவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (நி)

# எரிவாயு விலை அதிகரிப்பு காரணமாக வெதுப்பகங்களை நடத்த முடியாதுள்ளது

## அகில இலங்கை வெதுப்பக சங்கம்

(கொழும்பு) எரிவாயு விலை அதிகரிப்பு காரணமாக வெதுப்பக கைத்தொழிலை பராமரிக்கும் திறன் இல்லை என அகில இலங்கை வெதுப்பக சங்கம் அறிவித்துள்ளது.

வெதுப்பக பொருட்களின் விற்பனை ஏற்கனவே 25% குறைந்துள்ளதாக அதன் தலைவர் என். கே ஜயவர்தன தெரிவித்தார்.

மேலும் எரிவாயுவின் விலை அதிகரித்தாலும் வெதுப்பக பொருட்களின் விலை அதிகரிக்கப்படாது என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# வலுவடைந்தது ரூபாவின் பெறுமதி

## மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு) அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 10.3 வீதத்தால் வலுவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், ரூபாவின் பெறுமதி இவ்வாறு வலுவடைந்துள்ளதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள தரவுகளில் தெரிய வந்துள்ளது.

அதேசமயம், இந்திய ரூபாவுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியும் 10.9 வீதத்தால் உயர்வடைந்துள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

மேலும், யூரோவுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 10.9 வீதத்தால் வலுவடைந்துள்ளதாகவும் மத்திய வங்கியின் தரவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

# அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு அமைச்சரவையில் தீர்மானம்

(கொழும்பு) 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு சுமார் 10,000 ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என அரசாங்க தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரச ஊழியர்களுக்கு முறையான சம்பள அதிகரிப்பு வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னர் தெரிவித்திருந்தார்.

இது குறித்த விவாதங்கள் அமைச்சரவையில் இடம்பெற்றதாகவும் இதற்கு இணக்கம் கிட்டியுள்ளதாகவும் சில அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கமையவே, எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் சுமார் 15 லட்சம் அரச ஊழியர்களுக்கு இந்த சம்பள அதிகரிப்பு கிடைக்குமென செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

# நாட்டில் 23 சதவீதமானோர் நீரிழிவு நோயால் பாதிப்பு

## ஆய்வில் தகவல்

(கொழும்பு) நாட்டில் 23 சதவீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை உட்சுரப்பியல் நிபுணர்கள் கல்லூரியினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இது நீரிழிவு நோயினால் ஆபத்தில் உள்ள உலகின் முதல் 10 நாடுகளுக்குள் உள்ளதாக அந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நீரிழிவு நோய் தொடர்பில் கருத்துத் தெரிவித்த கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவத் துறை பேராசிரியர் மருத்துவர் பிரசாத் கட்டுலந்த, நீரிழிவு நோய் காரணமாக இலங்கையில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2006 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இலங்கையின் சனத்தொகையில் 10 சதவீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டது.

அத்துடன் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகமான நீரிழிவு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹோலி 'பொறி' பறக்க... ஜடேஜா 'வலை' விரிக்க...

## கொல்கத்தாவில் இந்தியா கொண்டாட்டம் தென்னாபிரிக்கா ஏமாற்றம்





பிறந்தநாளில் விராட் ஹோலியின் "பொறி" பறந்த துடுப்பாட்டமும் ஜடேஜா விரித்த சுழல் "வலை" யிலும் சிக்கிய தென்னாபிரிக்க அணி 243 ஓட்டங்களால் படுதோல்விய டைந்தது.

இந்தியாவில் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. கொல்கத்தா ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் அரையிறுதிக்கு முன்னேறிவிட்ட இந்தியா, தென்னாபிரிக்கா அணி கள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ரோகித் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இந்திய அணியில் எவ்வித மாற்றமும் செய்யப்பட வில்லை. தென்னாபிரிக்கா அணியில் கோயட்சீக்குப் பதில் சுழற் பந்துவீச்சாளர் ஷம்சி இடம்பிடித்தார்.

இந்திய அணிக்கு அணித் தலைவர் ரோகித், சுப்மன் ஜோடி சிறப்பான ஆரம்பம் கொடுத்தது. நிகிடி பந்து வீச்சில் ரோகித் இரண்டு சிக்சர் விளாசினார். ஆனால், ரபாடா 'வேகத்தில்' 40 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மகாராஜ் 'சுழ லில்' சுப்மன் (23) சிக்கினார். ஹோலி, ஸ்ரேயாஸ் இணைந்து நிதானமாக விளையாடினர். இருவரும் அரை சதம் அடித்த னர். ஸ்ரேயாஸ் 77 ஓட்டங்கள் எடுத்தார். ராகுல் (8) ஏமாற் றினார். ஷம்சி பந்துவீச்சில் சூர்ய குமார் (22) ஆட்டமிழந்தார்.

வழக்கம்போல ஜொலித்த ஹோலி சதம் விளாசினார். இதன் மூலம், ஒரு நாள் அரங் கில் அதிக சதம் (49) அடித்த ஜாம்பவான் சச்சினின் சாத னையை சமன் செய்தார். இதை பிறந்தநாளில் எட்டியிருப்பது கூடுதல் 'ஸ்பெஷல்'. இந்திய அணி 50 ஓவரில் 5 விக்கெட் டுக்களை இழந்து 326 ஓட்ட ங்கள் எடுத்தது. ஹோலி (101), ஜடேஜா (29) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்திய மண்ணில் ஒரு நாள் அரங்கில் 6 ஆயிரம் ஓட்ட ங்களை எட்டிய 2 வது இந்திய வீரரானார் ஹோலி. முதலிடத் தில் ஜாம்பவான் சச்சின் (6976) உள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கு குயின்ரன், கப்டன் பவுமா மோசமான ஆரம்பம் கொடுத்த னர். சிராஜ் 'வேகத்தில்' குயின் ரன் (5) ஆட்டமிழந்தார். பவுமா 11 ஓட்டங்களில் திரும்பினார். ஷமி பந்துவீச்சில் மார்க்ரம் (9) ஆட்டமிழந்தார். ஜடேஜா 'சுழ லில்' கிளாசன் (1) சிக்கினார். துசென் (13) அணியை கைவிட் டார். அணி 40 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டை இழந்து தடுமா றியது.

பின், ஜடேஜா வீசிய 'சுழல்' வலையில் மில்லர் (12), மகாராஜ் (7) சிக்க அணி மீளவே முடியாத நிலைக்கு சென்றது. முடிவில், தென்னாபிரிக்கா 27.1 ஓவரில் 83 ஓட்டங்களுக்கு சுருண்டது. இந்தியா சார்பில் ஜடேஜா 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி னார். (7)

### டில்லியில் காற்று மாசுபாட்டின் எதிரொலி

## நடக்குமா இலங்கை - வங்கம் மோதல்?



டில்லியில் காற்று மாசுபாடு அதிகரித்திருப்பதால் இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ண லீக் போட்டி இன்று நடப்பது சந்தேக மாகியுள்ளது.

இந்தியாவில் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இன்று, டில்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நடக்கவு ள்ள 38ஆவது லீக் போட்டியில் இலங்கை, பங்களாதேஷ் அணி கள் மோதுகின்றன.

இதுவரை 7 போட்டியில், 2 வெற்றி, 5 தோல்வி என 4 புள்ளி களுடன் உள்ள இலங்கை அணி அரையிறுதிக்கு முன்னேறுவது கடினம். ஒருவேளை மீத முள்ள 2 போட்டியிலும் வென்றால் 8 புள் ளிகளுடன் மற்ற போட்டிகளின் முடிவுக்காக காத்திருக்க வேண் டும். தவிர, புள்ளிப்பட்டியலில் 'ரொப்-7' இடத்தை உறுதி செய்யும் பட்சத்தில் 2025ல் பாகிஸ்தானில் நடக்கவுள்ள சம்பியன்ஸ் டிரொபி தொடருக்கு நேரடியாக தகுதி பெற லாம்.

ஏழு போட்டியில், ஒன்றில் மட் டும் வென்ற பங்களாதேஷ் அணி யின் அரையிறுதி வாய்ப்பு முடிந்து விட்டது. மீதமுள்ள போட்டிகளில் ஆறுதல் வெற்றி பெற முயற்சிக் கலாம்.

ஒருநாள் போட்டியில் இவ் விரு அணிகள் 53 முறை மோதின. இதில் இலங்கை 42, பங்களா தேஷ் 9ல் வெற்றி பெற்றன. இர ண்டு போட்டிகளுக்கு முடிவு இல்லை. இருப்பினும் சமீபத்தில் முடிந்த உலகக் கிண்ணத்துக் கான பயிற்சி ஆட்டத்தில் பங்களா தேஷ் அணி, இலங்கையை வீழ்த் திய உற்சாகத்தில் உள்ளது.

**போட்டி நடக்குமா?**

சமீபகாலமாக டில்லியில் காற்று மாசுபாடு அதிகரித்துள்ளது. மத் திய மாசுக்கட்டுப்பாடு வாரிய கணக் கின்படி, காற்று மாசுபாட்டின் அளவு 500க்கு 457 ஆக உள் ளது. இதனால் இலங்கை வீரர்கள் பயிற்சி மேற்கொள்ளவில்லை. பங்களாதேஷ் வீரர்கள் முகக்க வசம் அணிந்து பயிற்சி செய்தனர். எனவே திட்டமிட்டபடி போட்டி நடப்பது சந்தேகம். ஏனெனில் ஐ.சி.சி., 2.8 விதிமுறைப்படி: ஆடுகளத்தின் தன்மை, தட்ப வெப்பநிலை உள்ளிட்ட சூழ்நிலை கள் வீரர்களுக்கு ஆபத்தானவை என்றால் போட்டியை எந்த நேரத் திலும் நிறுத்தலாம். (7)







### உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 8 | 8 | 0 | 16 |
| 2 | தென்னாபிரிக்கா | 8 | 6 | 2 | 12 |
| 3 | அவுஸ்திரேலியா | 7 | 5 | 2 | 10 |
| 4 | நியூசிலாந்து | 8 | 4 | 4 | 8 |
| 5 | பாகிஸ்தான் | 8 | 4 | 4 | 8 |
| 6 | ஆப்கானிஸ்தான் | 7 | 4 | 3 | 8 |
| 7 | இலங்கை | 7 | 2 | 5 | 4 |
| 8 | நெதர்லாந்து | 7 | 2 | 5 | 4 |
| 9 | பங்களாதேஷ் | 7 | 1 | 6 | 2 |
| 10 | இங்கிலாந்து | 7 | 1 | 6 | 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலத்தமடு பண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் குதித்த பல்கலைக்கழக மாணவர்கள்






(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - மயிலத்தமடு, மாதவணை பண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

போராட்டக்களத்தில் பெருமளவான பொலிஸாரும் குவிக்கப்பட்டனர்.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம், எமது நிலங்களை ஆக்கிரமிக்காதே என பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழர்களின் பூர்வீக இடங்களான மயிலத்தமடு, மாதவனைப் பகுதிகளில் பெரும்பான்மை இனத்தவர்கள் அத்துமீறி குடியிருப்புகளை அமைத்து வருகின்றனர்.

அதேவேளை குறித்த பகுதியில் மேய்ச்சலில் ஈடுபடும் தமிழ் பண்ணையாளர்களுடைய கால்நடைகள் மீது துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சூழலில் பெரும்பான்மையாளர்களின் அத்துமீறல்கள் மற்றும் ஆக்கிரமிப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இதற்கு நிரந்தர தீர்வு கோரியும் தமிழ் கட்சியினரும் தமிழ் அமைப்பினரும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## வனவிலங்குகளால் ஏற்படும் பயிர்ச்சேதம் குறித்து ஆய்வு

(கொழும்பு)

வனவிலங்குகளால் ஏற்படும் பயிர்ச்சேதங்களால் நாட்டுக்கு ஆண்டுக்கு 17 முதல் 20 பில்லியன் ரூபாய் வரை இழப்பு ஏற்படுவதாக கணக்கெடுப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத் தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது குறித்து மேலும், தெரிவிக்கையில், வன விலங்குகள் சேதம் காரணமாக வருடாந்தம் 31,000 மெற்றிக் தொன் மரக்கறிகள் மற்றும் பழங்கள் இழக்கப்படுவதாகவும் வன விலங்குகளால் ஏற்படும் பயிர்ச்சேதங்களைத் தடுப்பதற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து உத்திகளும் தோல்வியடைந்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## மின்கட்டண அதிகரிப்பால் அலங்காரமீன் வளர்ப்பாளர்களுக்கு நெருக்கடி



(கொழும்பு)

மின்கட்டணம் அதிகரித்துள்ளதால், தொழிலை தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக, ஏற்றுமதிக்கான அலங்காரமீன் வளர்ப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் நன்னீர் மற்றும் உப்புநீர் அலங்கார மீன்கள் வாழும் தொட்டிகளுக்கு தொழில்துறையினர் செயற்கை ஒக்சிஜன் விநியோகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மின்கட்டண உயர்வால் கடும் அவதிக்குள்ளாகி வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எதிர்வரும் வரவு- செலவுத் திட்டத்தில் மின்சாரக் கட்டணத்திற்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை மின் கட்டண அதிகரிப்பால் சிறுதொழில் முயற்சியாளர்கள் உட்பட பலரும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## இராசிபலன்

06.11.2023
ஐப்பசி 20, திங்கட்கிழமை
நவமி முழுவதும்
ஆயிலியம் 3.26 மணிவரை

சுபநேரம் -12.05-1.35 மணிவரை
இராகு காலம்-7.35-9.05 மணிவரை

சந்திராஷ்டமம்- பூராடம், உத்தராடம்.

வளவன்

**மேஷம்** – எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** – தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** – இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்** – தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட்சேர்க்கை உண்டு

**சிம்மம்** – நண்பர்கள் ஒளிவுமறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, குடும்பச்சுமை கூடும், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** – வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சுபகாரிய செயல்களில் தாராளம் காட்டுவீர்கள்.

**துலாம்** – எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** – எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும், தொழில் வளர்ச்சி கூடும், ஆரேக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

**தனுசு** – உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்** – சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**கும்பம்** – மதிநுட்பத்தால் மகத்துவமான காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மீனம்** – உடல்நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள்.

தன்னம்பிக்கையும் பொறுமையும் கொண்ட வாழ்க்கைதான் சரித்திரம் படைக்க வைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யுத்த நிறுத்தம் வேண்டும் என

# இலங்கை வாக்களித்திருப்பது பெருமைக்குரிய விடயம்

## சுமந்திரன் எம்.பி



(சாவகச்சேரி).

பாலஸ்தீனத்தில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என எமது நாடும் வலியுறுத்தி யிருப்பது பெருமைக்குரிய விடயம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கைதடியில் இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது நாட்டு சிறுவர்கள் சந்தோசமாக சிறுவர் தினத்தை கொண்டாடும் வேளையில் உலகின் இன்னொரு பகுதியில் சிறுவர்கள் அல்லல்படுவதும் காயப்படுவதும் கொல்லப்படுவதுமான சம்பவங்கள் இடம்பெறுவதனை மறக்க முடியாது.

விசேடமாக பாலஸ்தீனத்தில் நடக்கும் போரில் நாளாந்தம் பல சிறுவர்கள் அவயங்களை இழந்து வருகின்றனர்.

பாலத்தீனத்தில் நடக்கும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என உலகம் எழுப்பும் குரலோடு எங்கள் குரலையும் நாம் எழுப்ப வேண்டும்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் யுத்த நிறுத்தத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

120 நாடுகள் அதற்கு ஆதரவாக வாக்களித்தனர். 14 நாடுகள் எதிராக வாக்களித்தனர். 45 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலையாக இருந்தனர்.

ஒரு தீமை அல்லது அநீதி நடக்கும் போது நடுநிலையாக இருப்பது அந்த அநீதிக்கு துணைபோவதற்கு சுமமானது.

வாக்கெடுப்பில் எமது நாடும் யுத்த நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்ற 120நாடுகளில் ஒரு நாடாக இருந்துள்ளது. இது பெருமைக்குரிய விடயம். யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்.

விசேடமாக சிறுவர்கள் மிக மோசமாக பாதிக்கப்படும் சூழலை மனதில் கொண்டு யுத்தத்தை நிறுத்த வேண்டும். நாம் சிறிய நாடாக இருந்தாலும் நாம் சொல்வதனை யார் கேட்கப் போகிறார்கள் என்ற எண்ணத்தை விடுத்து ஒவ்வொருவரும் குரல் கொடுக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (நி-30)

# சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த நால்வர் கைது

(அராலி)

யாழ்ப்பாணம் - குருநகர் கடற்பகுதியில் அனுமதியின்றி சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த நால்வர் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் சட்டவிரோதமாக கடலட்டையை பிடித்துக் கொண்டு இருந்த வேளை மண்டைதீவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களது படகு ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டது.

இவ்வாறு பிடிக்கப்பட்ட நால்வரும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள நீரியல்வள திணைக்களத்திற்கு கொண்டு வந்த பின்னர், நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-104)




சாவகச்சேரி ரி.பி ஹன்ற் ஞாபகார்த்த ஓவிய கூடத்தின் வடக்கு மாகாணம் தழுவிய கலைப் போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஓவிய கூட வளாகத்தில் இடம்பெற்றிருந்தது. (படம்:-சுபேசன்)

# யாழில் தடம்புரண்ட பேருந்து



(யாழ்ப்பாணம்)

காரைநகர் களபூமியில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் வலந்தலையினை அண்மித்த மதவடி பகுதியில் விபத்து சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து வண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஆணைக்குழுக்களை நியமிப்பது தேர்தலை பிற்போடவே

## சிறீதரன் எம்.பி சாடல்



(கிளிநொச்சி)

காலத்திற்குக்காலம் தேர்தல் ஆணைக்குழுக்களுக்களை நியமித்து, ஜனாதிபதி தேர்தலை பிற்போடும் நடவடிக்கையில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

சர்வாதிகார ஆட்சியை முன்னெடுக்கும் நோக்கில் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு செயற்படுவதாக கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சிவஞானம் சிறீதரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காலத்திற்குக்காலம் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு அவற்றினால் எந்தவிதமான பிரயோசனமோ, நீதியோ கிடைக்கவில்லை.

இதுவும் அதுபோன்ற ஜனாதிபதி தேர்தலை பிற்போடும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதாகவே கருத வேண்டும்.

ஜனாதிபதிக்குத் தேர்தல் என்பது பாகற்காய் போன்றது. அவரின் நோக்கம் பொருளாதாரத்தை உயர்த்துவதாக தெரிவித்து தொடர்ந்து ஆட்சியை கொண்டு செல்வதே.

அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் உள்ளிட்ட அனைத்து தேர்தல்களும் நடத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# சீனத்தூதுவர் உள்ளிட்ட குழு வவுனியாவிற்கு விஜயம்



(வவுனியா)

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தலைமையிலான குழுவினர் நேற்று வவுனியாவிற்கு விஜயம் மேற்கொண்டு சீனாவின் உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தலைமையிலான குழுவினரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் வரவேற்றதுடன், அவருடைய தலைமையில் சீன அரசாங்கத்தால் வடக்கு மக்களுக்கு நிவாரண உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. (நி-316)

# இணுவில் பகுதியில் உள்ள வீடொன்றில் சுமார் 135 பவுண் நகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - இணுவில் பகுதியில் உள்ள வீடொன்றில் 135 பவுணுக்கும் அதிகமான தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளன.

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, இணுவில், மஞ்சத்தடி பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை நகைகள் திருட்டு போயுள்ளன.

அந்த வீட்டில் அந்தியேட்டி கிரியை நடைபெறவிருந்த நிலையிலேயே குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை மூன்று மணியளவில்சமையல்வேலைக்காக எழுந்த குடும்பத்தினர் சார்ஜ் போடுவதற்கு கையடக்க தொலைபேசியை தேடிய போது அலுமாரிக் கதவு திறந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

பின்னர் நகைகளை பார்த்த போதே நகைகள் திருட்டு போயுள்ளதை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு, கோப்பாய் பொலிஸார் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் விளைச்சலை இரட்டிப்பாக்க அமுல்படுத்தப்படவுள்ள புதிய திட்டம்

(கொழும்பு)

நாட்டின் நெல் விளைச்சலை அடுத்த ஆறு பருவங்களுக்குள் இரட்டிப்பாக்குவதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விவசாய அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போதுள்ள நெற்பயிர்களின் அளவு 08 இலட்சம் ஹெக்டேயர்களாகும், ஒவ்வொரு ஆண்டும் இரண்டு பருவங்களில் 1.3 மில்லியன் ஹெக்டேயர் நெல் வயல்களில் பயிரிடப்படுகிறது.

இதனால் கிடைக்கப்பெறும் நெல்லின் மொத்த விளைச்சல் சுமார் 5.2 மில்லியன் மெற்றிக் தொன் ஆகும். எனினும் உற்பத்தி செய்யக்கூடிய அரிசியின் அளவு 3.1 மில்லியன் மெட்ரிக் தொன் ஆகும்.

நாட்டில் நுகர்வுக்கு வருடாந்தம் 2.4 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி தேவைப்படுகிறது.

இந்நிலையில், நெல்விளைச்சலை அதிகரிப்பதற்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் விவசாயிகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்க வேண்டும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 2023 ஆம் ஆண்டு விவசாயத்திற்காக 132 பில்லியன் ரூபா வழங்கப்பட்டதாகவும், 2024 ஆம் ஆண்டு நெல் விளைச்சலில் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த அரசாங்கத்தால் அதிக பணம் வழங்கப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் மீண்டும் ஹிஸ்புல்லாவிடம் கையளிப்பு

(மட்டக்களப்பு)

முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லாவினால் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் அரசாங்கத்தினால் கைப்பற்றப்பட்டு, 4 வருடங்களின் பின்னர், மீண்டும் அதனை ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சம்பிரதாய பூர்வமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை புனானையில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் வைத்து ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லாவிடம் கையளித்தார்.

மட்டக்களப்பு புனானையில் 400 ஏக்கர் நிலப்பரப்பில் தனியார் பல்கலைக்கழகத்தை முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லா நிர்மாணித்து வந்துள்ள நிலையில், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர், அதனை அரசாங்கம் கையகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (நி)

# காசாவில் தங்கியிருந்த இலங்கையர்கள் நாடு திரும்பினர்



(கொழும்பு)

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் தங்கியிருந்த 11 இலங்கையர்கள் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாக விமான நிலையத்துக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்கள் காசா பகுதியிலிருந்து ரஃபா கேட் வழியாகவும் கெய்ரோ விமான நிலையத்திலிருந்து கட்டார் மற்றும் எகிப்து ஊடாகவே இவர்கள் கட்டுநாயக்க வந்தடைந்தனர். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | திளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 280 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 350 | 450 |
| தக்காளி | 250 | 250 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 100 | 150 | 150 |
| கோவா | 300 | 200 | 240 | 300 |
| கரட் | 350 | 350 | 350 | 400 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 |
| புடோல் | 250 | 200 | 150 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 350 | 500 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 300 | 350 |
| பாகற்காய் | 450 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 240 | 220 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 400 | 350 | 250 | 400 |
| லீக்ஸ் | 250 | 200 | 200 | 300 |
| பீற்றூட் | 160 | 140 | 150 | 300 |
| கறிமிளகாய் | 450 | 350 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 300 | 400 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 280 | 150 | 250 | 330 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1400 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 80 |
| இராசவள்ளி | 450 | 400 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 400 | 350 | -- | 200 |
| முள்ளங்கி | 80 | 140 | -- | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 150 |


# பெறுகை அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## சபைநிதி-2023

1. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், வடமாகாணம்** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், வியாபாரப் பெயர்பதிவைக் கொண்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் ,** (தொலைபேசி இலக்கங்கள்.021-222-2700, பக்ஸ் இல 021-222-0138 e.mail – npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 06.11.2023 ஆம் திகதியிலிருந்து 20.11.2023 ஆம் திகதிவரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** எனும் இடத்திலிருந்து **06.11.2023** ஆம் திகதியிலிருந்து **20.11.2023** ஆம் திகதி வரை காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.1,500/- (வரி நீங்கலாக)** செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும். கேள்வி ஆவணத்தினைப் பெறுவதற்கு கோரிக்கை கடிதத்துடன் வியாபாரப் பெயர்பதிவுச்சான்றிதழின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** எனும் முகவரிக்கு **21.11.2023** ஆம் திகதி **செவ்வாய்க்கிழமை** காலை **10.00** மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

7. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 30 (முப்பது) நாட்கள் **(21.12.2023)** வரையும் செல்லுபடியாகும்.

8. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை Rs.Mn(Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | மீளளிக்கப்படாத வைப்பு | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| **NP/14/41/(10)/Acc/ Proc/Bicycles-2023-II** | **Procurement of Bicycle** | 1.5 | 01 மாதம் | பதிவு செய்யப்பட்ட நிறுவனம் (வியாபாரப் பெயர்ப்பதிவு) | **1,500.00** | 20,000.00 | 18.01.2024 |
| **NP/14/41/(10)/Acc/ Proc/ Sewing Machine -2023-II** | **Procurement of Sewing Machine** | 1..0 | 01 மாதம் | பதிவு செய்யப்பட்ட நிறுவனம் (வியாபாரப் பெயர்ப்பதிவு) | **1,500.00** | 15,000.00 | 18.01.2024 |
| **NP/14/41/(10)/Acc/ Proc/ Desktop Computers -2023-II** | **Procurement of Desktop Computers** | 1.0 | 01 மாதம் | பதிவு செய்யப்பட்ட நிறுவனம் (வியாபாரப் பெயர்ப்பதிவு) | **1,500.00** | 20,000.00 | 18.01.2024 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேச சபை.**

(சி-7565)

**06.11.2023**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஈரான் போதைப் பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் திடீர் தீ விபத்து- 32 பேர் உயிரிழப்பு



(டெஹ்ரான்)
ஈரானின் வடக்கு பகுதியில் கஸ்பியன் கடல் பகுதியையொட்டிய கிலான் மாகாணத்தில் போதைப் பொருள் மறுவாழ்வு நிலையத்தில் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த தீவிபத்து கடந்த வெள்ளிக்கிழமை அதி காலை இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் சிக்கி 32 பேர் உயிரிழந்துள்ள தோடு , 16 பேர் காயமடை ந்துள்ளனர் என அந் நாட்டில் இருந்து வெளி வரும் ஈரான் வயர் என்ற செய்தி நிறுவனம் தெரி விக்கின்றது.

இந் நிலையில், காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு டெஹ்ரானில் இருந்து வடமேற்கே 200 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள லாங்கிரவுடு நகரில் உள்ள வைத்தியசாலை களில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

உடனடியாக விரைந்த தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் பற்றி பொலிஸார் விசா ரணை நடத்தி வருகின்ற னர். (நி)

## நேபாளத்தில் மீண்டும் நிலநடுக்கம்



(நேபாளம்)
நேபாளத்தில் இரண்டாவது நாளாக நேற்றும் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

காத்மண்டுவில் இருந்து 169 கிலோமீற்றர் தொலைவில் நேற்று அதி காலை 3.6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகி யுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் நேபாளத்தில் 6.4 ரிக்டர் அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது.

இந்நிலநடுக்கம் டில்லி-என்.சி.ஆர்., உத்தர பிர தேசம் மற்றும் பீகார் ஆகிய வடஇந்திய பகுதிகளிலும் உணரப்பட்டதாக தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தோரின் எண் ணிக்கை 157 ஆக அதிக ரித்துள்ள நிலையில் மீண் டும் நிலநடுக்கம் பதிவாகியுள்ளமை குறிப்பிட த்தக்கது. (நி)

## புதிய ஏழு கிரகங்களை கண்டுபிடித்த நாசா

(வோஷிங்டன்)
கெப்லர் விண்வெளி தொலைநோக்கியொன்றின் மூலம் நாசா ஏழு புதிய கிரகங்களை கண்டுபிடித்து ள்ளது. குறித்த கண்டுபிடிப் பிற்கு ஆய்வாளர்கள் கெப் லர்-385 என்று பெயர் வைத்துள்ளனர்.

சூரியக் குடும்பத்திலுள்ள கிரகங்களை காட்டிலும் குறித்த கிரகங்களில் இரு ந்து வெளிவரும் வெப்பம் அதிகமாக காணப்படுகின்ற மையும் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மேலும், கண்டுபிடிக்க ப்பட்ட ஏழுகிரகங்களும் அளவில் பூமியை விடப் பெரிதாகவும் நெப்டியூனை விட சிறியதாக இருப்பதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெப்லர்-385 இன் மையத்தில் சூரியனைப் போன்ற ஒரு நட்சத்திரம் இருக்கிறது. அந்த நட்சத் திரம் நமது சூரியனை விட சுமார் 10% பெரியதாகவும் 5% வெப்பமானதாகவும் காணப்படுகிறதாக ஆய்வா ளர்கள் கூறியுள்ளனர்.

பொதுவாக வெளியே கண்டுபிடிக்கப்படும், சூரிய குடும்பங்களில் அதிகளவில் கிரகங்கள் இருக்காது என் றும் ஆறுக்கும் மேற்பட்ட கிரகங்களைக் கொண்ட ஒரு சில சூரியக் குடும்பங் களில் இந்த கெப்லர்-385 ஒன்றாக இருக்கிறது என் றும் ஆய்வாளர்கள் தெரி வித்துள்ளனர்.

இந்நிலையில், கண்டு பிடிக்கப்பட்ட கிரகங்களில் ஏதேனும் ஒரு கிரகத்தில் உயிரினங்கள் வாழ வாய்ப் புள்ளதா என்பது பற்றிய தகவல் இன்னும் தெரிய வில்லை. இந்த கிரகங்க ளின் அமைப்பை பற்றி இன்னும் கூடுதல் ஆய்வை நாசா மேற்கொள்ள இருக் கின்றமை குறிப்பிடத்தக் கது. (நி)

## உக்ரைன் மீதான சர்வதேசத்தின் கவனம் திசைதிரும்பியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி விசனம்

(கீவ்)
இஸ்ரேல் மற்றும் காசா வுக்கு இடையிலான மோதல் காரணமாக உக் ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு குறித்து சர் வதேச கவனம், திசைதிரு ம்பியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமீர் ஜெலென்ஸ்கி தெரிவித் துள்ளார்.

சர்வதேச ஊடகமொன் றுக்கு வழங்கிய செவ்வி யொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள் ளார்.

உக்ரைன் மீது தொடர் ந்தும் ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகின்றது. ஆனால் இஸ்ரேல் மற்றும் காசா மோதல் அதிகரித்துள்ள நிலையில் சர்வதேசத்தின் கவனம் உக்ரைன் மீது திரும்பவில்லை.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் உக்ரைன் மீது முழு அளவிலான படை யெடுப்பினை மேற்கொண்ட ரஷ்யாவின் இலக்குகளில் இதுவும் ஒன்று என் றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.



இஸ்ரேலின் தொடர்ச்சி யான தாக்குதல் காரண மாக உக்ரைன் போர் ஸ்தம்பித நிலையை அடை ந்துள்ளதாக உயர்மட்ட இரா ணுவ ஜெனரல் ஒருவர் தெரிவித்த கருத்தை தான் நிராகரிப்பதாகவும் உக் ரைன் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## போர் ...
## உடன் ...
## இஸ் ...

(ஜெருசலேம்) —
ஹமாஸ் பிடியில் ...
நிறுத்தத்திற்கு உட...
தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளின் கனுடன் இடம்பெற்ற கலந்து ரையாடலின் பின்னர் இடம் பெற்ற தொலைக்காட்சி உரை யிலேயே இஸ்ரேல் பிரதமர் இதனைத் தெரிவித்துள் ளார்.

இஸ்... மற்றும் பி... டெல் அ... பேச்சுவா... போர் நி... ன்படுமா... ன்கன் ... திருந்தார்...

## இஸ்ரேல் பிரதம... ஆயிரக்கணக்க...



(ஜெருசலேம்)
இஸ்ரேல் பிரதமர் பெஞ்ச மின் நெட்டன்யாகு பதவி விலக வேண்டும் என கோரி ஆயிரக்

கணக... இல்ல... பாட்ட... ஹ...

## பிரதமர் நெதன்... 7 சதவீதத்தின...

### ஆய்வாளர்கள்...

(ஜெருசலேம்)
இஸ்ரேல்-காசா போருக்கு எதிரான விமர்சனங்கள் இஸ்ரே லுக்கு உள்ளேயும் வலுத்து வரும் நிலையில் பிரதமர் நெதன்யாகு வுக்கு மக்கள் ஆதரவு குறை ந்துள்ளது.

பிரதமர் கையாளும் வித்தை 7

சதவீத... கருத்த... ஹமா... தடுக்க... குறை... பொறு... என்று... னர். பு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெளிநாடு

# ர் நிறுத்தத்திற்கு
# ன்படமாட்டோம்
## ஸ்ரேல் பிரதமர் சூளுரை



ம்)

டியில் உள்ள பணயக்கைதிகள் விடுவிக்கப்படும் வரை தற்காலிக போர் த உடன்பட மாட்டோம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ளார்.

இஸ்ரேலிய பிரதமர் மற்றும் பிற அதிகாரிகளுடன் டெல் அவிவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது போர் நிறுத்தத்திற்கு உட ன்படுமாறு அன்டனி பிளி ன்கன் கோரிக்கை விடுத் திருந்தார்.

இதனை அடுத்து சில நிமிடங்களுக்குப் பிறகு ஒரு தொலைக்காட்சியில் பேசிய இஸ்ரேல் பிரதமர், பணயக் கைதிகளை விடுவிப்பதை உள்ளடக்காத ஒரு தற்கா லிக போர் நிறுத்தத்தை நிராகரிப்பதாக கூறியுள் ளார்.

ஹமாஸ்க்கு எதிராக இஸ்ரேல் முழு பலத்துடன் தொடர்ந்தும் செயற்படும் என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரி வித்துள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி முதல் காசா மீதான இஸ்ரேலிய தாக்குதல்களில் குறைந்தது 9,227 பாலஸ்தீனியர்களும் இஸ்ரேலில் 1,400 இற்கும் அதிகமானோரும் கொல்ல ப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

## தமர் பதவி விலக வேண்டும்
## க்கானவர்கள் ஆர்ப்பாட்டம்



கணக்கானவர்கள் அவரது இல்லத்திற்கு வெளியே ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஹமாஸ் கடந்த மாதம் 7 ஆம் திகதி மேற்கொண்ட தாக்குதல் இஸ்ரேல் ஹமாஸ் மோதலிற்கு வழிவகுத்துள்ள நிலையிலேயே ஆயிரக்கண க்கானவர்கள் இஸ்ரேலிய பிர தமரின் வீட்டிற்கு வெளியே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு ள்ளனர்.

இஸ்ரேலிய பிரதமர் பதவி விலக வேண்டும், பணயக் கைதிகளை மீட்க வேண்டும் என வேண்டுகோள் விடுத் தனர். ஹமாஸ் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டவர்களை நினைவு கூர்ந்து மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (நி)

## இரண்டு பள்ளிவாசல்கள் மீது
## இஸ்ரேலிய இராணுவம் குண்டுத் தாக்குதல்

(காசா)

தெற்கு காசா நகரில் உள்ள இரண்டு பள்ளிவா சல்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் குண் டுவீசி தாக்குதல் நடத்தியதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



இந்த தாக்குதல்களால் அல்-சப்ரா பகுதியில் உள்ள அலி பின் அபிதாலிப் மற்றும் அல்-இஸ்திஜாபா என்ற பள்ளி வாசல்கள் அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் காசாவில் பல்வேறு பகுதிகளிலிருந்து முந்தைய வான்வழித் தாக்கு தல்களில் இருந்து தப்பி ஓடிய ஆயிரக்கணக் கான மக்கள் தங்கியுள்ள பாடசாலை மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த அகதிகள் முகாம் கட ந்த நாட்களில் மூன்று முறை தாக்கப்பட்டுள்ளது என்றும் இந்த புதிய தாக்குதலில் பாதி க்கப்பட்டவர்கள் விபரம் இது வரை வெளியிடப்படவில்லை.

அத்தோடு முற்றுகை நட வடிக்கைக்கு மத்தியில் அனை த்து பகுதிகளுக்கும் மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோ கம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் சோலர் பொனல்கள் மற்றும் ஜென ரேட்டர்களை குறிவைத்து இஸ்ரேலிய இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளதாக காசாவில் உள்ள அதிகாரி கள் தெரிவித்துள்ளனர். (நி)

## தன்யாகுவிற்கு
## ினரே ஆதரவு
### ர்கள் கருத்து

சதவீதம் மட்டுமே ஆதரிப்பதாகக் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. ஹமாஸின் திடீர்த் தாக்குதலைத் தடுக்கத் தவறிய வேவுத்துறையின் குறைபாடுகளுக்கும் அவர் பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்ற னர். பூசல் முடிவுக்கு வந்த பிறகு நெதன்யாஹு கணிசமான பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடலாம் என்றும் அவர்கள் கருதுகின்றனர். போருக்குப் பிறகு அவரோ அவரது அரசாங்கமோ அதிகாரத்தில் நீடிக்க வாய்ப்பில்லை என்றும் கூறப்படுகிறது.

அரசியல் தலைமைத்துவத்து க்கும் பொதுமக்களுக்கும் இடையே பிளவு ஏற்பட்டுள்ளது தெளிவாய் தெரிவதாகவும் கூறப்படுகிறது. மேற் குக் கரையில் நிலவும் சண்டை பற்றி இஸ்ரேலிய அமைச்சர்கள் வெளியிடும் கருத்துகள் நிலை மையை மேலும் மோசமாக்குவதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டனர். (நி)

#### பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு
## நேபாள பிரதமர் விஜயம்



(காத்மண்டு)

நேபாள பிரதமர் புஸ்ப கமல் டகல் பிரச்சண்டா பூகம்பத் தினால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு உடனடி விஜயத்தினை மேற் கொண்டுள்ளார்.

மருத்துவக் குழுவினர், நேபாள இராணுவத்தை சேர் ந்த 16 பேர் மீட்பு நடவடிக்கை களிற்கான பொருட்கள் உட்பட கரணங்களுடன் நேபாள பிரதமர் பாதி க்கப்பட்ட பகுதி களுக்கு விஜயம் மேற்கொண்டு ள்ளார்.

உயிரிழப்பு கள், சொத்துக்க ளிற்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக தெரிவித்துள்ள பிரதமர், தேடு தல் மீட்பு பணிகளில் சம்பர் ப்பட்ட அனைவரும் உத வேண்டும் எனவும் வேண் கோள் விடுத்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# நீரிழிவு நோயும் பத்தியாபத்தியமும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

பாதகமான உணவுப் பழக்கங்கள் நீரிழிவு முதலான நோய்களுக்கு இலக்காக வழிவகுத்தால் வாழ்நாள் முழுவதும் இந்நோயுடன் வாழக் கற்றுக் கொள்ள நேரிடும். ஆகவே உணவுப் பழக்கவழக்கம் முக்கிய இடம் பெறுகிறது.

**"இழிவறிந்து உண்பான்கண் இன்பம் போல்
கழிபே ரிரையான்கண் நோய்."**

பொருள் - குறைந்தளவு உண்பவன் இடத்தில் இன்பம் நிற்பது போல அளவுக்கதிகமாக உண்பவனிடத்தில் நோய் நிற்கும்.

**"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணில்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு."**

பொருள் - உடலுக்கு தீங்கு தராத நல்ல உணவை அளவோடு ஒருவன் உண்டால் அவன் உயிர்க்குத் தீமை இல்லை. சாத்வீகமான நல்ல உணவை உண்டால் நமது உடல் மட்டுமல்ல மனம் கூட ஆரோக்கியமாக இருப்பது உண்ணும் உணவின் தன்மையிலேயே தங்கியுள்ளது.

சித்த மருத்துவத்தில் சிறுதானியங்களின் பாவனையும் அதன் ஆரோக்கிய குணம் பற்றியும் பதார்த்த குண விளக்க நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**செந்நெல் வகைக்குஞ் சிறு தானிய வகைக்கும்
இந்நிலத்தில் உண்டோ இலக்கென்ப - உண்ணுங்கால்
கண்டமட்டி லேபெயராங் கண்ட அவரவாகள்
உண்டமட்டி லேசுவையாம் ஓது.**

பொருள் - இவ்வுலகில் விளையும் நன்செய், புன்செய் தானியங்களின் பெயர் சுவையை அளவிடக்கரிது. அவற்றைப் புசித்த வகையில் சுவையுடையதாகும்.

நீரிழிவு நோயால் ஏற்படும் ஆபத்தான பின்விளைவுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தவிர்க்க வேண்மாயின் உங்களது நீரிழிவை எப்பொழுதும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு இரத்தத்தில் குளுக்கோசின் அளவை சரியான அளவில் வைத்திருப்பது அவசியமாகும்.

நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு கடைப்பிடிக்க வேண்டிய 4 விடயங்களுள் கவனமாக திட்டமிடப்பட்ட உணவு முறை முக்கியமானதொன்றாகும்.

சித்த மருத்துவத்தில் தினவொழுக்கத்தில் காலை பருகும் பானத்தில் தேநீர், கோப்பியைத் தவிர்த்து நீராகாரம் அருந்துதல் சிறப்பாகும். ஏனெனில் காலை எழுந்தவுடன் உள்ளே செல்லும் பானம் மிகவும் முக்கியம் வாய்ந்தது. சித்தர் பாடலில் குறிப்பிட்டபடி ஆற்றுநீர் வாதம் போக்கும், அருவி நீர் பித்தம் போக்கும், சோற்று நீர் மூன்றையும் போக்கும். இந்த நீராகாரம் தயாரிக்க நமது பாரம்பரிய அரிசி வகைகளே சிறந்தது.

நிசி நீரினை காலை எழுந்தவுடன் பல், வாய் தூய்மை செய்த பின் பயன்படுத்தலாம் அல்லது கழிவு நீக்கத்தின் பின்பு பயன்படுத்தலாம். இதனை சித்தர்கள் அமிர்தம் என்கின்றனர். அன்று பொங்கிய அரிசிச் சோற்றில் நீர் ஊற்றி வைக்க வேண்டும். மறுநாள் காலையில் நீராகாரம் தயாராகி விடும். நீரிழிவு நோயாளிகளுக்கு நிசி நீரிலுள்ள உட்பொருட்கள் உடலில் முக்கிய பங்காற்றுவதால் இவர்களில் ஏற்படும் தீய விளைவுகள் தடுக்கப்படும்.

முக்கியமாக இன்சுலின் உற்பத்தியினை அதிகப்படுத்தி சீனியின் அளவைப் பேணுகின்றது. அத்துடன் முக்கிய அமினோ அமிலங்கள் நிசி நீரில் கலந்துள்ளன. இவை உடலின் மூளையின் இயக்கம், இரத்த அணுக்கள் இயக்கம், நோய் எதிர்ப்பாற்றல் போன்றவற்றுக்கு உதவுகிறது.

நீரிழிவு நோயாளிகள் காலை உணவாக கொழுப்பு, எண்ணெய் உணவுகள் உண்ணாமல் முளை கட்டிய பயறு வகைகள், கீரை வகைகள், காய்கள் போன்றவற்றாலான உணவு வகைகளையும் அதே நேரம் அதிகளவான நார்ச் சத்துக்கள் உள்ள உணவுகளையும் எடுக்க வேண்டும்.

முளை கட்டிய பாசிப்பயறுடன் கஞ்சி வகைகளையும், நவதானிய கஞ்சி வகைகளையும் ஏலம், கராம்பு சேர்த்து பயன்படுத்தலாம். முளை கட்டிய பயறு இரத்தத்தில் சீனியின் அளவைக் கட்டுப்படுத்துவதை பல ஆய்வுகள் உறுதிப் படுத்துகின்றன. இவை நோயில்லா நெறியில் தினவொழுக்கத்தில் குறிப்பிட்டுள்ள முக்கிய விடயமாகும்.

நீரிழிவு நோயாளிகள் மதிய உணவில் அரிசி, கம்பு, வரகு, சாமை, தினை, குதிரைவாலி, உழுந்து, பாசிப்பயறு போன்ற பல வகையான தானியங்கள் பயன்படுத்த வேண்டும். மதிய உணவிற்கு எல்லாத் தானியங்களும் சேர்ந்த கலவையை உணவாகப் பயன்படுத்தலாம். அல்லது ஒரு நாளிற்கு ஒரு தானியத்தைப் பயன்படுத்தி சோறு தயாரிக்கலாம். அரிசியைப் போலவே மேற்கூறிய தானியங்களில் சோறு சமைக்கலாம்.

அத்துடன் கீரைகளும், காய்களும் அதிகம் உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

"கீரையில்லா உணவு கூரையில்லா வீடு" என்பது பழமொழி. கூரையில்லா விட்டால் அதனை வீடு எனச் சொல்ல முடியாது. அதே போல் கீரையில்லா ஒன்றை நல்ல உணவு எனச் சொல்ல முடியாது. தினமும் ஒரு கீரையை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். முழுமையாகக் காய்கறிகளையும் கீரையையும் உணவாகக் கொள்ள முடியும்.

திருக்குறளில் தாவர உணவின் மகிமை பற்றியும் மாமிச உணவைத் தவிர்க்க வேண்டும் என்பதையும் கூறியுள்ளார். பல ஆய்வுகளில் தாவர உணவு உண்பவர்களிலும் பார்க்க மாமிச உணவு உண்பவர்கள் மது எடுப்போருக்கும் தொற்றா நோய்களின் தாக்கம் அதிகமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**"படை கொண்டார் நெஞ்சம் போல் நன்றூக்
காது ஒன்றன்
ஊடல் சுவை உண்டார்
மனம்."**

**- திருக்குறள் - 253**




மிருக உணவை உண்டவர் மனமும் நல்ல விடயங்களைக் கருத்துக்கு எடுக்கமாட்டாது. நார்ச் சத்து நாளாந்த உணவின் ஒரு முக்கிய கூறாகும். நாளாந்த உணவில் ஒருவர் 20 - 35 கிராம் நார்ப்பொருளை உள்ளெடுத்தல் அவசியமாகும்

இதனால் குருதியில் ஏற்படும் குளுக்கோசு அதிகரிப்பு அதனைத் தொடர்ந்து ஏற்படும் இன்சுலின் அதிகரிப்பு போன்ற செயற்பாடுகளின் அடிப்படையில் உட் கொள்ளப்பட்ட உணவின் அளவு போதும் அல்லது திருப்தியானது என உடலினால் உணரப்படுகிறது.

நார்ப்பொருளானது சிறுகுடலினுள் நடைபெறும் குளுக்கோசு அகத்துறிஞ்சல் படிப்படியாக நடைபெற உதவுகின்றது. இதனால் உணவின் பின்னான இன்சுலின் அதிகரிப்பு சடுதியாக அன்றி படிப்படியாக நிகழுகிறது. இதன் மூலம் குளுக்கோசு கொழுப்பாக மாற்றப்பட்டு சேமிக்கப்படுதல் தவிர்க்கப்படுகிறது.

பதார்த்த குண சிந்தாமணியில் புன்செய் தானியங்களான கேழ்வரகு, கம்பு, சாமை, துவரை, சோளம், குதிரைவாலி, மூங்கில் அரிசி வகைகளும், காய்த் தானிய வகைகளான துவரை, உழுந்து, கடலை, மொச்சை, பெரும் பயறு, சிறுபயறு, பச்சைப் பயறு, கொள்ளு, எள்ளு என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளது விசேட அம்சமாகும்.

தானியங்கள், சிறு தானியங்களின் பாவனையும், கஞ்சி வகைகளும் சித்த மருத்துத்தில் பத்தி யத்திற்கு உகந்தவை ஆகும்.

நீரிழிவு நோயில் எள்ளும், எள்ளுப் புண்ணாக்கின் பாவனையும் யாழ்ப்பாண நூலான செகராச சேகரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எள்ளில் காணப்படும் கொழுப்பானது உறையாத தன்மையுடைய அதியுயர் கொழுப்பாகும். இதில் உயிர்ச்சத்து ஏ,ஈ உண்டு.

எனவே தான் இதில் தயாரிக்கும் சகல உணவுகளும் (எள்ளுருண்டை, எள்ளுப் புண்ணாக்கு) சிறந்தவையாக அமைகின்றன.

எள்ளை நன்றாகக் கழுவி காய வைத்து துப்பரவாகத் துவைக்கப்பட்டு எண் ணெய் பெற்ற பின் பெறப்படும் பிண்ணாக்கு தூயதாக இருக்கும். இதனை சிறந்த புரத உணவாகப் பயன்படுத்த முடியும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலஅபகரிப்பிற்கு எதிராக வவுனியாவில் போராட்டம் முன்னெடுப்பு



(வவுனியா)

வடக்கு- கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களின் மீது முன்னெடுக்கப்பட்டு வரும் அடக்குமுறைகளிற்கு எதிராக வவுனியாவில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டமானது நேற்றுக் காலை தமிழரசுக் கட்சியினரால் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் நிலஅபகரிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும், மயிலத்தமடு மேய்ச்சல்தரையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டவிரோத குடியேற்றங்களை அகற்ற வேண்டும் போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியும் கோசங்களையும் எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவைசேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எ. சுமந்திரன், சி.சிறீதரன், இரா.சாணக்கியன், தமிழரசுக்கட்சியின் செயலாளர் ப. சத்தியலிங்கம், மாவட்ட அமைப்பாளர் ந.கருணாநிதி மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (நி)

# தங்கக் கடத்தலில் ஈடுபட்ட 5 நபர்கள் கடற்படையினரால் கைது

## 2 கிலோவுக்கும் அதிகமான தங்கமும் மீட்பு



(மன்னார்)

மன்னாரில் தங்கக் கடத்தலில் ஈடுபட்ட 5 நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 2 கிலோவுக்கும் அதிகமான தங்கங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இலங்கை கடற்படையினர் மன்னார் ஓலைத்தொடுவாய் பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை முன்னெடுத்த விசேட நடவடிக்கையின் போது வெளிநாட்டில் இருந்து கடல் வழியாக கடத்த முயன்ற சுமார் 2 கிலோ 150 கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, கடத்தல் கும்பலையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்த நடவடிக்கையின் மூலம் 05 சந்தேகநபர்கள், டிங்கி படகு, மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி என்பன இந்த சட்ட விரோத செயலுக்கு பயன்படுத்தப்பட்ட நிலையில் அவற்றையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 28 முதல் 56 வயதுக்குட்பட்ட வங்காலை மற்றும் மன்னார் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என கடற்படை தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் தங்கம் மற்றும் பிற வாகனங்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக காங்கேசன் துறையில் உள்ள சுங்க தடுப்பு அலு வலகத்தில் ஒப்படைக்கப்பட்ட னர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (நி-285)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2959

நிதுஜா




சதீஸ்




சாரங்கன்




கண்ணன்




ரேவதி




ரேகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 327





அவனுடைய தகப்பனாருக்கு முன்னால் பிறந்த மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். ஆகையால் இராஜ்யம் ஆளுவதைப் பற்றி அவன் கனவிலும் நினைக்கவில்லை ஆசை கொள்ளவும் இல்லை. கடல் கடந்த நாட்டுக்குப் போருக்குச் சென்ற சைன்யத்தோடு அவனும் போனான். ஒரு சிறிய படையின் தலைமை அவனுக்கு அளிக்கப்பட்டிருந்தது. போரில் அவனுடைய சைன்யம் தோல்வியுற்றது. கணக்கற்றவர்கள் மாண்டார்கள். வாலிபன் தலைமை வகித்த படையிலும் எல்லாரும் மாண்டார்கள். அந்த வாலிபனும் போரில் உயிரைவிடத் துணிந்து எவ்வளவோ சாஹஸச் செயல்கள் புரிந்தான். ஆனாலும் அவனுக்குச் சாவு நேரவில்லை. தோற்று ஓடிய சைன்யத்தில் உயிரோடு தப்பிப் பிழைத்தவர்கள் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தார்கள். திரும்பித் தாய்நாடு செல்லுவதற்கு அவர்கள் ஆயத்தமானார்கள். திரும்பிப் போவதற்கு அந்த வாலிபன் மட்டும் விரும்பவில்லை. தன் கீழிருந்த படை வீரர்கள் அனைவரையும் பறிகொடுத்துவிட்டு அவன் தாய் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல விரும்பவில்லை. அவனுடைய குலத்தைச் சேர்ந்தவர்கள் மகாவீரர்கள் எனப் புகழ் பெற்றவர்கள். அந்தப் புகழுக்குத் தன்னால் அபகீர்த்தி நேருவதை அவன் விரும்பவில்லை. ஆகையால், கப்பல் போய்க்கொண்டிருந்தபோது, சற்றுத் தூரத்தில் அழகிய தீவு ஒன்று தெரிந்தபோது, வாலிபன் மற்ற யாரும் அறியாமல் கடலில் மெள்ளக் குதித்தான். நீந்திக் கொண்டே போய்த் தீவில் கரை ஏறினான். கப்பல் கண்ணுக்கு மறையும் வரையில் காத்திருந்தான். பிறகு ஒரு மரத்தின் மேல் ஏறி அதன் அடிக்கிளையில் உட்கார்ந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான். அந்தத் தீவின் அழகு அவன் மனத்தைக் கவர்ந்தது. ஆனால் அத்தீவில் மனித சஞ்சாரமே இல்லை என்று தோன்றியது. அச்சமயம் அது ஒரு குறையென்று அவனுக்குத் தோன்றவில்லை. அவனுடைய உற்சாகம் மிகுந்தது. மரக்கிளையில் சாய்ந்து உட்கார்ந்தபடி வருங்காலத்தைப் பற்றிப் பகற்கனவுகள் கண்டு கொண்டிருந்தான்.

திடீரென்று மனிதக் குரலில், அதுவும் பெண் குரலில், ஒரு கூச்சல் கேட்டது திரும்பிப் பார்த்தான். இளம் பெண் ஒருத்தி கூச்சலிட்ட வண்ணம் ஓடிக் கொண்டிருந்தாள். அவளைத் தொடர்ந்து பயங்கரமான கரடி ஒன்று ஓடியது. அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கரடி மேலும் மேலும் அந்தப் பெண்ணை நெருங்கிக் கொண்டிருந்தது. இருவருக்கும் இடையேயிருந்த தூரம் குறுகிக் கொண்டிருந்திருந்தன. வேறு யோசனை ஒன்றும் செய்வதற்கு அப்போது நேரம் இருக்கவில்லை. வாலிபன் மரக்கிளையிலிருந்து பொத்தென்று கீழே குதித்தான். மரத்தில்தான் சாத்தியிருந்த வேலை எடுத்துக் கொண்டு ஓடினான். கரடி அந்தப் பெண்ணை நெருங்கி அதன் பயங்கரமான கால் நகங்களை அவள் கழுத்தில் வைப்பதற்கு இருந்தது. அச்சமயத்தில் குறி பார்த்து வேலை எறிந்தான். வேல் கரடியைத் தாக்கியது. கரடி வீல் என்று ஏழுலகமும் கேட்கும் படியான ஒரு சத்தம் போட்டு விட்டுத் திரும்பியது. பெண் பிழைத்தாள், ஆனால் வாலிபன் அபாயத்துக்குள்ளானான். காயம்பட்ட கரடி அவனை நோக்கிப் பாய்ந்தது. வாலிபனுக்கும் கரடிக்கும் துவந்த யுத்தம் நடந்தது. கடைசியில் அந்த வாலிபனே வெற்றி பெற்றான்.

வெற்றியடைந்த வாலிபனுடைய கண்கள் உடனே நாலாபுறமும் தேடின. எதைத் தேடின என்பது அவனுக்கே முதலில் தெரியவில்லை. அப்புறம் சட்டென்று தெரிந்தது. அவன் கண்கள் தேடிய பெண், சாய்ந்து வளைந்து குறுக்கே வளர்ந்திருந்த ஒரு தென்னை மரத்தின் பின்னால் அதன் பேரில் சாய்ந்து கொண்டு நின்றாள். அவள் கண்களில் வியப்பும் முகத்தில் மகிழ்ச்சியும் குடிகொண்டிருந்தன. அவள் காட்டில் வாழும் பெண். உலகத்து நாகரிக வாழ்க்கையை அறியாதவள் என்று அவளுடைய தோற்றமும் உடையும் தெரிவித்தன. ஆனால் அவளுடைய அழகுக்கு உவமை சொல்ல இந்த உலகத்தில் யாரும் இல்லையென்று சொல்லும் படியிருந்தாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பிரபுவின் மனம்

(நேற்றைய தொடர்ச்சி)



பிரபு அவன் கொடுத்த லிஸ்டில் இருந்த பொருட்களை எடுத்து வைத்து கொண்டே பானையில் தண்ணீர் இல்லை என்பதை எப்படி சொல்வது என யோசித்து கொண்டே நீங்களே எடுத்து குடித்து கொள்ளுங்கள் என்றான்.

ரஹீம் அவன் ஊன்றுகோலின் உதவியுடன் பானையை நோக்கி நடந்து வந்து குடித்தான். குடித்தவன் ஊன்று கோலை கீழே போட்டு விட்டு நடக்க ஆரம்பித்தான்.

அந்த நீரை பருகியதால் தான் இந்த மாதிரி குணமாகியதாக பிரபுவிடம் கூறிவிட்டு அவன் பொர்ருட்களை வாங்கி கொண்டு வீட்டுக்கு சென்றான்.

பிரபுவிற்கு இன்னும் அதிர்ச்சி ஏற்பட்டது. ஆனாலும் அவன் அந்த வயதானவரால் தான் என எண்ணினான்.

ரஹீம் வீட்டுக்கு சென்று நடந்ததை கூறினான். அவனது தங்கைக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்தது. உடனடியாக அவளை பிரபுவின் கடைக்கு அழைத்து சென்றான் பானையில் இருந்து தண்ணீரை எடுத்து அவன் தங்கைக்கு கொடுத்தான். அவளும் உடனடியாக சரியானாள்.

இதை பார்த்ததும் பிரபு மகிழ்ந்தான். பதிலுக்கு அவர்களிடம் இருந்து அவன் எதுவும் பெற்றுக் கொள்ளவில்லை. இந்த விடயம் ஊருக்குள் காட்டு தீயை போல பரவியது.

ஊரில் உள்ள நோயாளிகள் அனைவரும் பிரபுவின் கடைக்கு வந்து அந்த நீரை குடித்தனர். ஒவ்வொரு நாளும் அந்த பானையில் நீர் நிரம்பியது. பிரபுவின் கடைக்கு அருகில் உள்ள ஊர்களில் இருந்து மக்கள் வர ஆரம்பித்தனர்.

அவர்கள் மகிழ்வாக திரும்பி செல்வதை பார்த்த பிரபு மனதிற்குள் இந்த மக்களுக்கு தன்னால் முடிந்தது என சந்தோஷப்பட்டான். பிரபுவை பலரும் ஆசிர்வதித்து சென்றார்கள்.

அப்போதுதான் அந்த வயதானவர் சொன்னது அவனுக்கு நினைவுக்கு வந்தது. (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாமே நமக்குப் பகையும் நாமே நமக்குத் துன்பமும்

தீதும் நன்றும் பிறர் தர வாரா என நம் தமிழ் உரைத்து நிற்கிறது.

அதாவது உனக்குத் தீது நேர்ந்தாலும் சரி. அல்லது நன்மை விளைந்தாலும் சரி. அவை நீ தேடியவைதான்.

இதை இன்னும் ஒரு படி மேற்சென்று விளக்குவதாயின், நீ எதை எப்படிச் செய்தாயோ அவை அவ்வாறே உன்னை வந்தடைகிறது.

இத்தத்துவத்திலிருந்து நாம் கற்றுக் கொள்வது மற்றவர்களுக்கு நாம் கெடுதி செய்தால், அந்தக் கெடுதி நமக்கு தீதாய் அமையும்.

மாறாக மற்றவர்களுக்கு நாம் நன்மை செய்தால், நமக்கும் நன்மை வந்தடையும்.

இதைக் கூறும்போதுதான் எங்கள் தமிழினத்தின் அவலத்தை எங்கள் தமிழ் அரசியல் தரப்புகளின் இயலாமையை, அவர்களின் அறியாமையை, அவர்களிடம் அறவே இல்லாமல்போன அரசியல் இராஜதந்திரத்தை நினைக்கும் போதெல்லாம் வேதனை நெஞ்சை அடைக்கும்.

அந்தளவுக்கு எங்கள் தமிழ் மக்களின் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது.

ஆம் 30 ஆண்டு காலப் போராட்டம். அதில் தங்களின் இன்னுயிர்களைத் தியாகம் செய்த பல்லாயிரக்கணக்கான எங்கள் பிள்ளைகள்.

கூடவே தமிழர்களின் போராட்டத்தை யாராலும் எதுவும் செய்ய முடியாது என்ற கணிப்புகள்.

அதற்குள் எழுந்த காட்டிக் கொடுப்புகள். அந்தோ! அத்தனையும் இழந்து யாருமற்ற அநாதைகளாக ஈழத் தமிழ் மக்கள் நிற்கின்ற பரிதாபம்.

இதற்குள்ளும் ஆளுக்கொரு அரசியல் கட்சி. தத்தம் சுயநலனை அடிப்படையாகக் கொண்ட விமர்சனக் கருத்துக்கள்.

என்னை முதன்மைப்படுத்தாவிட்டால், எனக்கு அழைப்புத் தராவிட்டால், என்னை மேடையில் பேச அனுமதிக்காவிட்டால் அதை வெட்டி விழுத்தும் வரை உறங்க மாட்டேன் என்ற பாவச் செயல்கள்.

என் செய்வது தமிழ் மக்களின் நலன் கருதி பொது அமைப்பொன்றை உருவாக்கினால், அதற்கு எதிராகப் பற்பல அமைப்புகள்.

எப்பாடுபட்டும் அந்த அமைப்பை உடைத்து விட வேண்டும் என்ற கபடத்தனங்கள். அதனால் தமிழ் மக்களின் நலன் சார்ந்த அமைப்புகள் எதுவும் இல்லாமல் போய்விட்ட பரிதாபங்கள்.

ஆம், இவை அனைத்தும் நாம் நமக்குத் தேடியவை. இதற்கும் சிங்களத் தரப்புக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது.

ஓ! எனதருமைத் தமிழ் உறவுகளே! எங்கள் அரசியல் கட்சிகளைக் கடிவாளம் இடக் கூடிய மக்கள் அமைப்பு நம்மிடம் உண்டா?

தமிழ் மக்களின் நலனை முன்னிலைப் படுத்துகின்ற ஊடகக் கூட்டமைப்பு இருக்கிறதா?

தென்னிலங்கை தீட்டுகின்ற சதித்திட்டங்களை, எங்கள் தொடர்பில் வெளிநாடுகள் கொண்டுள்ள நிலைப்பாடுகளை ஆராய்கின்ற புத்திஜீவிகள் குழு இருக்கிறதா?

எதுவும் இல்லை. எல்லாம் வெறும் செப்படி வித்தை. பதவி ஆசையால் கொண்ட ஆவுதி இன்னும் நடிப்பு. அவதந்திரம், நேர்மையீனம் என எல்லாமும் எங்களிடம் மேலாகி நிற்கிறது.

ஆக, நாமே நமக்குப் பகையும் நாமே நமக்குத் துன்பமும் என்பதுதான் உண்மை என்பதனை உணருமினே!

# பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் வடக்கில் அதிகரிப்பு

## அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

**வடக்கில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன என மனித உரிமை செயற்பாட்டாளரான அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்களுக்கான சட்ட விழிப்புணர்வுகளை வழங்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில்,

சமூக மட்டத்தில் பல்வேறுபட்ட அமைப்புக்கள் வேலை செய்கின்றன. அவை பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன.

இதற்கு காரணம் நாட்டில் இருக்கின்ற சட்டங்களை சரியாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதாகும். 2005 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டம். குடும்ப வன்முறைக்கு எதிராக பாதுகாப்பதற்கான சட்டம். இதனூடாக கூட பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை. அதில் பெண்கள் பாதுகாப்பு தொடர்பில் பல சட்ட ஏற்பாடுகள் இருக்கின்றது. அதைக் கூட செய்வதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பெண்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (நி-315)

# சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து சுமார் 95 நாட்களாக போராடும் மக்கள்

## எந்தத் தீர்வும் இதுவரை கிடைக்கவில்லை என விசனம் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளி பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து 95 ஆவது நாட்களுக்கும் மேலாக மக்கள் போராடி வரும் நிலையிலும் அதற்கான எந்த தீர்வுகளும் இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

தமது கோரிக்கைகள் தொடர்பில் வடமாகான ஆளுநர் மற்றும் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரதிநிதிகள், பொதுஅமைப்புகள் என்பவற்றிற்கும் என 28 இற்கும் மேற்பட்ட மகஜர்களை கையளித்துள்ள போதும். இதுவரை உரிய அதிகாரிகளிடமிருந்து எந்தவிதமான பதில்களும் கிடைக்கவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

தமது பிரதேசத்தில் குறித்த சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அயல் கிராமங்களான கிராஞ்சி, வலைப்பாடு, வேரவில் ஆகிய பகுதிகளில் மக்கள் வாழ முடியாத ஒரு சூழல் ஏற்படும் என்றும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து தமக்கான ஒரு நிரந்தரமான, நியாய பூர்வமான தீர்வை தர வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (நி-315)

### போலி ஆவணங்களை பயன்படுத்தி

# இத்தாலி செல்ல முயன்ற இருவர் கைது

(கொழும்பு)

போலி ஆவணங்களை பயன்படுத்தி இத்தாலி செல்ல முயன்ற பெண்ணொருவர் உள்ளிட்ட இரண்டு பேர் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் - தொடுவாவ பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணொருவரும் அவரது உறவினரான 23 வயடைய இளைஞரொருவருமே கைதாகியுள்ளனர். (நி)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** சீனோர் படகு துறை-காரைநகர், கடற்படைத்தளம்-காரைநகர், காரைநகர் கடற்படை முகாம், இ.போ.ச டிப்போ-காரைநகர், களபூமி, பாலைக்காடு அம்மன் கோவிலடி-காரைநகர், தோப்புக்காடு-காரைநகர், ஊரி-காரைநகர் கப்பூது, தில்லையம்பலம், யாக்காரு நூலகம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# வடக்கில் சீன நிதியுதவியின் கீழ் வீட்டுத்திட்டம்

வடமாகாண மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு நேற்று விஜயமொன்றை மேற்கொண்ட நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள மக்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கினாலும் அதற்கு தீர்வு காணும் வகையில் சீன அரசாங்கம் கடந்த காலத்திலும், தற்காலத்திலும் செயற்படுவதுடன், எதிர்காலத்திலும் அதற்காக செயற்படும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சீனா தொடர்ந்தும் உதவிகளை வழங்கி வருவதாக தெரிவித்த அவர் இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற சீன அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் சீன அரசாங்கம் 155 மில்லியன் ரூபாயை வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கியுள்ளது என்றும் அதில் நிவாரணப் பொதிகள் வழங்குவது மட்டுமன்றி மீன்பிடி வலைகள் பெறுவதற்கும் பயன்படுத்துவதாகவும் மிகுதிப் பணத்தில் வடமாகாணத்தில் வீடு அமைக்க திட்டமிட்டுள்ளதாகவும் இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ சென்ஹொங் மேலும் தெரிவித்துள்ளார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைதீவில் 'இந்தியாவே வெளியேறு' முழக்கத்துடன் சீனசார்பு முகமது முய்ஜு ஜனாதிபதியாகத் தெரிவு

01



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

ஏற்கெனவே இலங்கையில் சீனாவின் கை ஓங்கி வருகிறது. இப்படி இருக்கையில் மாலைதீவிலும் தற்போதைய அதிபர் இப்ராஹிம் முகமது சோலிஹ் தோல்வியுற்றதால் இந்திய பெருங்கடலில் இந்தியாவின் ஆதிக்கம் சரிவை காணும் எனக்கருதப்படுகிறது. புவிசார் அரசியலில் மாலைதீவு இந்தியாவுக்கு முக்கியமானதாக இருக்கிறது. மாலைதீவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான உறவை பலப்படுத்த, ஏராளமான அளவில் இந்தியா மாலைதீவில் முதலீடு செய்திருக்கிறது. ஆனால் சமீப காலமாக இந்தியாவுக்கு எதிரான முழக்கங்கள் இங்கு அதிகரித்திருந்தன.

**இந்தியாவுக்கு எதிரான முழக்கங்கள் ஏன்?**

1988 நவம்பரில் சதிப்புரட்சி முயற்சியொன்றை முறியடிப்பதற்கு மாலைதீவிற்கு இந்தியா ஒரு பராகமான்டோ படைப்பிரிவை அனுப்பியபோது அந்தப் படை வீரர்கள் மாலைத்தீவுவாசிகளால் பெரிதும் வரவேற்கப்பட்டார்கள். இலங்கையிலிருந்து இயங்கிய மாலைத்தீவு வர்த்தகப் பிரமுகர் ஒருவர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குப் பயன்படுத்திய இலங்கைப் போராளிப் படைகளை (PLOTE) முறியடிப்பதற்காக அன்றைய ஜனாதிபதி மௌமூன் அப்துல் கயூமிற்கு உதவ இந்தியா மேற்கொண்ட அந்த நடவடிக்கையின் பெயர் 'கக்றஸ்' (ஒப்பிரேசன் கள்ளிச்செடி) ஆகும். அந்த நடவடிக்கை வெளியார் தலையீட்டிலிருந்து மாலை தீவின் சுயாதிபத்தியத்தைப் பாதுகாத்தது.

ஆனால், இன்று தங்களது தீவு நாட்டில் இந்திய இராணுவப் பிரசன்னத்திற்கு எதிராக மாலைதீவுவாசிகள் கடுமையாக எதிர்த்துக்கிளம்பியிருக்கிறார்கள். இந்தியத்துருப்புக்கள் நிபந்தனையற்ற முறையில் உடனடியாக வெளியேற வேண்டுமென்று கோரிக்கைகள் அதிகரித்துவருகின்றன. தங்களது சுயாதிபத்தியத்திற்கு இந்தியாவினால் ஏற்படக்கூடியதென்று மாலைத்தீவுவாசிகள் கருதுகின்ற அச்சுறுத்தல் தொடர்பில் அவர்கள் சமூக ஊடகங்களில் பதிவுகளைப் பெருமளவில் செய்துவருவதுடன் வீதிகளிலும் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவிக்கொண்டிருக்கும் #India Out என்ற ஹேஷ்டெக்கினால் இந்தியாவிற்கு எதிரான உணர்வுகள் பல்கிப்பெருகியிருக்கின்றன.

மாலைதீவு தேசபக்த இளைஞர் இயக்கம் மாலைதீவு மண்ணில் இந்தியாவின் இராணுவப் பிரசன்னத்திற்கு எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்காக அமைதியான மோட்டார் சைக்கிள் பேரணிகள் பலவற்றை நடத்தியிருந்தார்கள். அந்தப் பேரணிகளில் நூற்றுக் கணக்கான இளைஞர்களும் கல்லூரி மாணவர்களும் பங்கேற்றார்கள். பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்து அவற்றினை அடக்கியது.

2018ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 58.4 சதவீத வாக்குகளைப்பெற்றுத் தெரிவான ஜனாதிபதி இப்ராஹிம் முகமது சோலிஹ் இன் ஆட்சியின் கீழ் இவ்வாறெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. சீனாவுடன் நெருங்கிய உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கு முக்கியத்துவம் கொடுத்த அப்துல்லா யாமினை தோற்கடித்த சோலிஹ் இந்திய ஆதரவாளர் என்று பரவலாகக் கருதப்பட்டவராவார்.




அண்மைய வருடங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்ற நிகழ்வுகளினாலேயே மாலைத்தீவில் இந்தியாவிற்கு எதிரான வெறுப்பு அதிகரித்து வந்திருக்கிறது. மாலை தீவின் உள்விவகாரங்களில் பலவந்தமாக தலையீடு செய்யவேண்டும் என்று ஆளும் பாரதிய ஜனதா கட்சி வெளிப்படையாக வலியுறுத்தியதும் அந்த நிகழ்வுகளில் ஒன்றாகும். அதுபோக மாலைதீவில் இருக்கும் இந்திய பிரஜைகளுக்கு ஏற்பட்டதாகக் கருதப்படும் அச்சுறுத்தல்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்க நேரடி இராணுவத்தலையீடு செய்யக்கூடிய சாத்தியம் குறித்தும் பாரதிய ஜனதா கட்சி கருத்து வெளியிட்டது. இதுவும் எதிர்ப்பலைக்கு காரணமாகியது.

மாலைத்தீவில் இந்தியாவின் டோனியர் கடல் கண்காணிப்பு விமானத்தை நிறுத்திவைப்பதற்குத் தேவைப்பட்ட 'பரிமாற்றக் கடிதம்' ஒன்றை விநியோகிப்பதற்கு முன்னைய ஜனாதிபதி யாமீனை பல வந்தப்படுத்துவதற்கு இந்தியா எடுத்ததாகக் கூறப்படும் முயற்சியும் இந்தியாவின் மிரட்டல்களுக்கு எதிரான வெறுப்புணர்வைத் தோற்றுவித்தது.

அதேவேளை, பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலையை நீக்குவதற்கும் 2018 இல் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கும் வசதியாக மாலைதீவு மண்ணில் இந்தியப்படைகளை நிலைவைக்குமாறு முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத் விடுத்த கோரிக்கையும் இந்திய எதிர்ப்புச்சுவாலையை மூளவைத்தது.

மாலைத்தீவில் இந்தியாவின் பொருளாதார நலன்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விவகாரங்களில் இந்திய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்தை அனுமதிக்கும் புதிய உடன்படிக்கை ஒன்றைத் தற்போதைய ஜனாதிபதி செய்துகொண்டு நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டதும் இந்தியாவிற்கு எதிரான போக்குகள் அதிகரிப்பதற்குக் காரணமாகியது.

தற்போதைய ஆட்சிக்கு முன்னதாக நடந்ததைப்போன்று உட்கட்டமைப்பு வசதிகள், அபிவிருத்திக்கான ஒப்பந்தங்கள் உட்பட பல்வேறு ஒப்பந்தங்கள் உரிய காலத்திற்கு முன்னரே இரத்துச் செய்யப்படும் ஆபத்தை இல்லாமல் செய்வதே இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும். இப்போது செய்யப்படுகின்ற ஒப்பந்தங்களை இரத்துச் செய்வதையோ அல்லது முடிவிற்குக் கொண்டுவருவதையோ கடுமையாக்கக் கூடியதாக தகராறுகளுக்கு இந்திய நீதிமன்றங்களுக்கு இணக்கத்தீர்வைக் காண்பது பற்றி இந்தியா வலியுறுத்த அண்மைய உடன்படிக்கை வழிவகுக்கும் என்று 2012 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்தியாவின் முதலீட்டுடன் விமான நிலையம் ஒன்றைக் கட்டுவதற்கான உடன்படிக்கையை இரத்துச்செய்த முன்னைய மாலைத்தீவு அரசாங்கத்தில் ஒரு அமைச்சராக இருந்த ஹுசைன் செரீப் கூறினார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவுடன் புவிசார் மூலோபாய போட்டாபோட்டி ஒன்று மூண்டிருக்கும் நிலையில் மாலைதீவில் தனது மூலோபாயப்பிடியை இழப்பதற்கு இந்தியா விரும்பவில்லை என்பது தெளிவானது. இந்தியா வின் பிராந்தியப் பாதுகாப்புக் கட்டமைப்பில் ஒரு முக்கிய அங்கமாக மாலைதீவு நீண்டகாலமாக இருந்து வந்திருக்கிறது. இருதரப்பும் கூட்டாக லாடார் வலையமைப்பையும் கண்காணிப்பு வசதிகளையும் கொண்டிருப்பதுடன் இராணுவ ஒத்திகைகளையும் பயிற்சிகளையும் மேற்கொண்டு வந்திருக்கின்றன.

நீண்டகால இருதரப்பு பாதுகாப்பு உடன்படிக்கைகளில் கீழ் அச்சுறுத்தல்களைக் கண்டுபிடித்து அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் ஆற்றல்களைப் பலப்படுத்துவதற்காக இந்தியா மாலைத்தீவில் நிரந்தரமாக இரு ஹெலிகொப்டர்களையும் டோனியர் கண்காணிப்பு விமானத்தையும் நிறுத்திவைத்திருக்கிறது.

இந்தியா, மாலைத்தீவை நெருங்கி வருகின்ற கப்பல்களையும் விமானங்களையும் கண்காணிப்பதற்கு மாலைத்தீவின் 21 தீவுகளில் தனது சொந்தக் கட்டமைப்புடன் இணைந்ததாக இந்தியா கரையோர ராடார் கொத்தணிகளை அமைப்பதற்கும் உதவியிருக்கிறது. ஆனால், இந்தியாவின் கண்காணிப்பு விமானமும் ஹெலிகொப்டர்களும் அவற்றை இயக்கிப் பராமரிக்கின்ற இராணுவ அதிகாரிகள் சகிதம் மாலைதீவில் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதை சந்தேகத்துடன் நோக்கும் போக்கு மாலைதீவு மக்களிடையே அதிகரித்து வருகின்றது.

இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றமையை மாலைத்தீவு பிராந்தியத்தை இந்தியாவுடன் இணைப்பதற்கு முன்னோடியான ஒரு பிரசன்னமாக நோக்குகின்ற சதிக்கோட்பாடுகள் பற்றியும் பரவலாக சந்தேகங்கள் கிளம்புகின்றன.

ஆனால், இது எப்போதுமே அவ்வாறிருந்ததில்லை என்று, மிகுந்த ஆபத்துக்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட "கக்றஸ்" இராணுவ நடவடிக்கையில் பராசூட் வீரராகப் பங்கேற்ற ஓய்வுபெற்ற லெப்டினன் ஜெனரல் வினோத் பாதியா, 1988 இல் தலையீடு செய்த இந்தியப்படைகள் மீது மாலைதீவினால் காட்டப்பட்ட நல்லெண்ணத்தை நினைவுகூருகின்றார்.

"மாலைத்தீவில் நாம் நிலைகொண்டிருந்த ஒருவருடகாலத்தில் அந்த நாட்டு மக்களின் நல்லெண்ணத்தை பிரதானமாக எமது சரியான இராணுவ நடத்தைகளின் மூலமாகவும் அவர்களது தேசிய பாதுகாப்பு சேவைக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகளின் மூலமாகவும் நாம் சம்பாதித்துக்கொண்டோம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுவதியொருவர்...

இல்லாத சமயம் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தனியார் வைத்தியசாலை ஒன்றில் பணியாற்றி வரும் யுவதி ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,30)

## சீனி வரி...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சீனி மீது 25 சதமாக இருந்த வரி, தற்போது 50 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வரி அதிகரிப்புக்கு முன்னர் 2 இலட்சத்து 24 ஆயிரம் மெட்ரிக் தொன் சீனி 25 சத வரியில் சந்தைக்கு விடப்பட்டதன் காரணமாக அரசாங்கத்திற்கு 100 கோடி வரி வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நட்டங்களை தவிர்க்கும் வகையில், வற் மற்றும் தொழில் வல்லுநர்கள் மீது பாரிய வரிகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த சீனி மாபியாவில் அங்கம் வகிக்கும் கூட்டாளிகளை பாதுகாக்க அரசாங்கம் முற்பட்டுள்ளது.

இதுபோன்ற மோசடிகளுக்கு இடமளித்திருப்பது எதிர்காலத் தேர்தல்களில் ஆதாயம் அடையவா என்ற சந்தேகம் எழுகிறது. இந்த வரி மோசடியில் அரசாங்கத்தின் தலையீடு நேரடியாகவே இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என அவர் தெரிவித்தார். (ந-7)

## தமிழர்...

தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் ஆதரவைக் கோருவது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஐந்து தமிழ்க் கட்சிகளை உள்ளடக்கிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 10:30 மணியளவில் மன்னாரில் அமைந்துள்ள ரெலோவின் அலுவலகத்தில் இடம் பெற்றது.

ரெலோ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் ஆரம்பமான இந்தக் கூட்டத்தில் ரெலோ சார்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா), கட்சியின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேன், ஈ.பி.ஆர்.எல்.எப் சார்பாக கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், கட்சியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன், கட்சியின் உபதலைவர் இரா.துரைரெட்ணம், புளொட் சார்பாக கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், கட்சியின் பொதுச் செயலாளர் ஆர்.ராகவன், தமிழ்த் தேசியக் கட்சியின் சார்பாக கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறிகாந்தா மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பாக கட்சியின் தலைவர் சிவநாதன் வேந்தன், கட்சியின் பேச்சாளர் கணேசலிங்கம் துளசி, கட்சியின் கிழக்கு மாகாணப் பொறுப்பாளர் நாகலிங்கம் நகுலேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கூட்டணியைப் பலப்படுத்தல், சமகால அரசியல் பிரச்சினைகள், ஜனாதிபதி பொது வேட்பாளர், மயிலத்தமடு பண்ணையாளர்கள் பிரச்சினை, மன்னாரில் காணிகள் அபகரிப்பு மற்றும் மீன் இறக்குமதி விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டன என்றும் இதன்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தில் தமிழர் ஒருவரைப் பொது வேட்பாளராக நிறுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டதாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (ந-7)

## முக்கிய...

களை மறுசீரமைக்கும்போது தொழில் இழப்புக்களை தவிர்த்தல் ஆகிய நான்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தமது கையொப்பத்துடன் குறித்த கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அக்கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கான சிறந்த பொறிமுறை சமுர்த்தி திட்டம், எனவே இந்த திட்டத்தின் பெயரை மாற்றுவது பொருத்தமானது அல்ல என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டியுள்ளது. (ந-7)

## இனவாதத்தை...

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இனவாதிகளால் நாட்டுக்கு அவமானம் ஏற்பட்டுள்ளது. அவர்களை அரசு கைது செய்யாமல் இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் எனச் சகல தரப்பினர்களிடையே இனவாதம் கக்குவோர் வெளிப்படையாக நடமாடுகின்றார்கள். அவர்களை அரசு கைது செய்ய வேண்டும்.

இனவாதிகளை வைத்துக் கொண்டு ஆட்சியைத் தொடரலாம் அல்லது ஆட்சியைப் பிடிக்கலாம் என்று எவரும் நினைத்தாலும் அது முட்டாள்தனம். இனவாத ஆட்சி ஒருபோதும் நிலைக்காது.” என்றும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (ந-7)

## தமிழரசுக்...

உடல்நலக் குறைவு காரணமாக அவர் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

கட்சியின் அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டம் வரும் ஜனவரி 20ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறும். அதன்போது கட்சித் தலைவர் உட்பட புதிய நிர்வாகிகள் தேர்வுக்கான நியமனங்கள் பற்றி ஆராயப்படும்.

மறுநாள் ஜனவரி 21ஆம் திகதி கட்சியின் பொதுக் குழு திருகோணமலையில் கூடி கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெறும்.

தெரிவுகளுக்குத் தேர்தல் தவிர்க்க முடியாமல் அமையுமானால் அவையும் அன்று இடம்பெறும்.

அதன் பின்னர் ஜனவரி 27 ஆம் திகதி கட்சியின் இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி மாநாடுகள் திருகோணமலையில் நடைபெறும்.

அதே சமயம் தேவைப்பட்டால் அன்றைய தினமும் கட்சியின் தற்போதைய பொதுக் குழுவின் அமர்வு ஒன்று திருகோணமலையில் முன்னெடுக்கப்படும்.

தொடர்ந்து கட்சியின் தேசிய மாநாட்டை ஜனவரி 28 ஆம் திகதி திருகோணமலையில் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (ந-7)

## போராட்டத்தில்...

ரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சித்தாண்டியில் மேய்ச்சல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பண்ணையாளர்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பண்ணையாளர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்ததாகக் குற்றம் சாட்டி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் மற்றும் கிழக்கு பல்கலைக் கழக மாணவர் ஒருவர் உட்பட ஆறு பேரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை குறித்த நபர்கள் கிராமசேவகரிடம் இருந்து பிணையாளிகள் நற்சான்றிதழ்களை குறித்த நேரத்தில் சமர்ப்பிக்காமையால் அவர்களின் பிணைக் கோரிக்கையை மறுத்த ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றம் அவர்களை தடுப்புக் காவலில் வைக்க உத்தரவிட்டது. (ந-7)


கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3531 — சீட்டிழுப்பு திகதி 05.11.2023 — ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 12 43 55 74 — J — 29736 — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி 2023.11.05 — சீட்டிழுப்பு இலக்கம் 1319 — V 01 46 53 58 V — ஆங்கில எழுத்து, வெற்றி இலக்கங்கள் — Double Chance 11099

Lucky 7 லக்கி — திகதி 05.11.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0115 — L7 இலக்கம் 2 2 — வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 9 5 0 0 1 1

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.11.05 — சீட்டிழுப்பு இலக்கம் 598 — இடபம் 15 32 35 43 இடபம் — 03407 — 22 — தேசிய லொத்தர் சபை

மெகா பவர் — திகதி 05/11/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1637 — W 09 10 11 12 52 — 78238 — Web: www.nlb.lk

மஹஜன சம்பத — திகதி 2023/11/05 — சீட்டிழுப்பு இலக்கம் 5289 — P 7 4 6 3 6 1 — தேசிய லொத்தர் சபை

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2263 — வர்ணம் செம்மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2023.11.05 — தினம் ஞாயிற்றுக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 20 22 51 60 — ஆங்கில எழுத்து S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,595,476/- — DLB அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா — திகதி 2023.11.05 — வெற்றி வாரம் 4424 — வெற்றி இலக்கங்கள் 02 14 31 32 — Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,908,880.00 — DLB

சசிரி — வெற்றி வாரம் 398 — சீட்டிழுப்பு திகதி 2023.11.05 — கபிலம் — வெற்றி இலக்கங்கள் 03 16 31 — 06 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,453,120/- — DLB www.dlb.lk

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3975 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2023.11.05 — தினம் ஞாயிற்றுக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 27 31 33 46 — கடகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,768,820/- — DLB

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — U 07 37 40 64 66 — 1439 — மஞ்சள் — 2023.11.05 ஞாயிறு — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 461,248,154.20 — DLB தொலைபேசி 011-2 333 546-47

அத கோடிபதி ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2089 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,956,040 — சீட்டிழுப்பு திகதி 2023.11.05 — 05 12 47 53 T — DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 60வது அகவையில் அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



**திரு. கதிரவேலு ஜெயக்குமாரன்**
**(வேலைகள் உதவியாளர், தாவரவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**

ஆவணி மாதம், 1999 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதல் நியமனம் பெற்று தனது சேவையை வைகாசி மாதம், 2009 இல் இருந்து கார்த்திகை மாதம், 2023 வரை தாவரவியல்துறையில் மேற்கொண்டு 24 வருடங்கள் நற்பணி செய்து ஓய்வு பெற்றுச் செல்லும் திரு. **கதிரவேலு ஜெயக்குமாரன்** அவர்களை என்றென்றும் வளமுடன் வாழ்கவென இன்றைய நன்நாளில் வாழ்த்துகின்றோம்.

**தாவரவியல்துறை சமூகம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(17624)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17671)
076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

IELTS - New Batch ஆரம்பம்
இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17620)

ENGLISH for Gr. 6 - O/L
P.THARMAKUMARAN (P.Mathan)
BA(Eng.Lit), Dip.in.Eng
NEWTON Group Classes
18/18, Wyman Road, Nallur. (17679)
TP: 077 792 3653

VILLAGE HOTEL
பஸ் சேவை
JAFFNA EXPRESS
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/= (17484)
T.P: 077 544 8503

குத்தகைக்கு
தெல்லிப்பளை கிழக்கில் தோட்டக்காணி குத்தகைக்கு உண்டு. இரண்டாயிரம் கண்டுகள். (17672)
074 388 1341

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension
இலங்கை விசா நீடித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS (C-7569)
0777-068-777

அமெரிக்க லொத்தர் விசா
நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன
இறுதி சந்தர்ப்பம் - தவறவிடாதீர்கள்
LOADING
0768226244
55000 இலவச விசாக்கள்
நீங்களும் அமெரிக்காவில்...
V2 Travels
0777469777 | 0743900353 | 0768226237 | 0768226240 | 0777068777 | 0764550670 | 0764550673 | 0768226230
0768226243 | 0776697960 | 0764550675 | 0768226238 | 0764550671 | 0777718322 | 0777726322 | 0743900355
0777720322 | 0764550674 | 0776699893 | 0768226242 | 0768226236
V2 TRAVELS

# 45ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.09.2023 அன்று
சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் கதிரவேலு மனோன்மணி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.03.1947 | 25.09.2023 |

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (06.11.2023) திங்கட் கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை மறுதினம் (08.11.2023) புதன்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்**

தகவல் - **குடும்பத்தினர்**
**கோணாவளை, வயாவிளான்.**
**077 174 2944**

(17629)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org